விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 தை 02 புதன்கிழமை (16.01.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 028




## விடுதலைப்புலிகள் மீதான தடை இலங்கையில் தற்போதைக்கில்லை

### யப்பானிடம் உறுதியளிப்பு

(கொழும்பு)

போர்நிறுத்த ஒப்பந்தம் இரத்துச் செய்தல் இன்றிலிருந்து நடைமுறைக்கு வந்தாலும் விடுதலைப்புலிகள் மீது தடையை விதிக்கவில்லை என இலங்கை அரசு யப்பானுக்குத் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ரோகித போகொல்லாகம யப்பானிய சமாதான முன்னெடுப்பாளர் யசூசி அகாஷியைச் சந்தித்த போது இலங்கையின் இந் நிலைப்பாட்டைத் தெரிவித்தார் என வெளிநாட்டலுவல்கள் அமைச்சு அதிகாரபூர்வமான அறிவிப்பில் தெரிவித்துள்ளது.

பயங்கர (08 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் மோதல்

(கிளிநொச்சி)

மன்னார் பரப்பாங்கண்டல் பகுதியில் படையினர் பெருமெடுப்பில் மேற்கொண்ட முன்னகர்வு நடவடிக்கை முறியடிக்கப்பட்டுள்ளதாகவும் இதில் 30ற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 100ற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர் எனவும் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மேற்குப் பகுதியிலுள்ள பரப்பாங்கண்டல் பகுதியில் திங்கட்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் படையினர் செறிவான எறிகணை மற்றும் பல்குழல் வெடிகணை சூட்டாதரவுடன் பாரியளவிலான முன்னகர்வை மேற்கொண்டனர்.

அண்மையில் உருவாக்கப்பட்ட தரைப்படையின் 58-வது டிவிசன் படையினர் மேற்கொண்ட இம் முன்னகர்வை விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தீவிர முறியடிப்புத் தாக்குதல் தொடுத்தனர்.

நேற்றுப் பிற்பகல் ஒரு மணிவரை நீடித்த இம் முறியடிப்புத் தாக்குதலில் அதிகளவிலான உயிரிழப்புக் (08 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுமக்களின் உரிமைகளை மீறினால் சர்வதேச சட்டங்களின்படி நடவடிக்கை!



## லூயிஸ் ஆர்பர் அம்மையார் எச்சரிக்கை

(ஜெனீவா)

சர்வதேச சட்டங்களை மதிக்காது பொதுமக்களின் உரிமைகளை மீறும் எத்தரப்பாகவிருந்தாலும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் அம்மையார் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் செய்து கொண்ட போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து இலங்கை அரசாங்கம் விலகியமை, இருதரப்புக்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தை நடக்குமென எதிர்பார்த்திருந்த நம்பிக்கையை இல்லாதொழித்துவிட்டது எனவும் லூயிஸ் ஆர்பர் அம்மையார் குறிப்பிட்டுள்ளார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அறிக்கை சமர்ப்பிக்குமாறு க.கா.குழுவிடம் கோரிக்கை

(கொழும்பு)

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கடந்த 6 வருட நடவடிக்கைகளின் மூலம் பெற்ற அனுபவங்கள் தொடர்பான அறிக்கை ஒன்றை சமர்பிக்குமாறு அரசாங்கம் கோரியுள்ளது.

அரசாங்கத்தின் சமாதானச் செயற்பாடுகளுக்கான தொடர்பாடல் செயலகப் பணிப்பாளர் பேராசிரியர் ரஜீவ விஜயசிங்க இக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரிடம் இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச)

## ஒப்பந்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிக்குமாறு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும்

### விடுதலைப்புலிகள் வேண்டுகோள்

(லண்டன்)

போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து இலங்கை அரசு வெளியேறிவிட்டது. எனினும் நாங்கள் அதனைக் கடைப்பிடிக்கத் தயாராகவுள்ளோம். இலங்கை அரசு தொடர்ந்தும் போர்நிறுத்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடிப்பதற்குச் சர்வதேச சமூகம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

லண்டன் பி.பி.ஸிக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். சர்வதேச சமூகத்தின் உதவியுடன் இனப்பிரச்சினையைச் சுமுகமாக அமைதியுடன் தீர்க்க முடியும் என நாங்கள் உறுதியாக நம்புகின்றோம்.

எனவேதான் நாங்கள் சர்வதேச சமூகத்திற்கு இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காண உதவுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளோம் என்றார்.

போர்நிறுத்த (08 ஆம் பக்கம் பார்க்க)

## உடன்படிக்கையிலிருந்து விலகல் குறித்து அகாஷிக்கு அரசாங்கம் விளக்கமளிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகியதற்கான காரணங்கள் குறித்து யப்பானின் சிறப்புத் தூதுவர் யசூசி அகாஷிக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விளக்கமளித்திருப்பதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

யப்பானின் சிறப்புத் தூதுவர் யசூசி அகாஷி நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

இச் சந்திப்பின் (08 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சித் தேர்தலை நிறுத்தக் கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

மட்டக்களப்பில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைக்கான தேர்தலை இரத்துச் செய்யக் கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

மட்டக்களப்பில் இராணுவத்தின் துணை ஆயுதக் குழுக்கள் செயற்பட்டு வரும் நிலையில் அங்கு சுதந்திரமான தேர்தலைச் சந்திக்க முடியாது என்று வலியுறுத்தியே இந்த வழக்கைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தாக்கல் செய்துள்ளது.

இது குறித்துத் (02 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவினர் இன்று இலங்கையை விட்டு வெளியேறுவர்

(கொழும்பு)

போர்நிறுத்த ஒப்பந்தம் அதிகாரபூர்வமாக இன்று புதன்கிழமை முடிவுக்கு வரும் நிலையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் வெளியேறும் நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்துள்ளதாகக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் பியா ஹன்சன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, வடக்குக் கிழக்குப் பகுதிகளிலிருந்து கண்காணிப்புக் குழுவினர் நேற்று முன்தினம் முற்றாக வெளியேறியுள்ளனர். யாழ்ப்பாணத்தில் இருந்த அலுவலகமும் நேற்று முன்தினம் மூடப்பட்டுள்ளதுடன் கொழும்பு வார்ட் பிளேசில் உள்ள தலைமையகமும் நாளை (இன்று) மூடப்படவுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

2002 ஆம் ஆண்டு நோர்வேயின் அனுசரணையுடன் (08 ஆம் பக்கம் பார்க்க)

## மண்கிண்டிமலையில் நேற்றுத் தாக்குதல்

(கிளிநொச்சி)

மணலாறு மண்கிண்டிமலைப் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைகள் மீது படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். நேற்றுத் தாக்குதல் நடத்த வந்த படையினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும் இதில் படையினரிடமிருந்து கிளைமோர்கள், கைக்குண்டுகள் மற்றும் படைப் பொருள்களைக் கைப்பற்றியுள்ளதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர். (ச-5)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பஸ் கட்டணங்களை உயர்த்தாவிடின் வேலை நிறுத்தத்தில் குதிப்போம்

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

எரிபொருட்களின் விலையேற்றத்தை மட்டும் கருத்தில்கொள்ளாது ஏனைய பராமரிப்புச் செலவுகளையும் கருத்தில் கொண்டு பஸ் கட்டணங்களை உயர்த்த வேண்டும்.

இதற்காக அரசாங்கத்துக்கும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கும் ஒரு வார கால அவகாசம் வழங்குகின்றோம் .

அதற்குள் தீர்வு காணப்படாவிட்டால் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிப்போம் என்று தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டியிலுள்ள மகளிர் ஆய்வு மத்திய நிலையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கூறியதாவது,

தேசிய போக்குவரத்து கட்டண கொள்கைக்கமைய 100க்கு 5 வீதம் கட்டணத்தை எம்மால் அதிகரிக்க முடியும். ஆனால் நாம் அதனை மேற்கொள்ளவில்லை.

நாட்டில் எரிபொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளது மட்டுமல்லாது பணவீக்கமும் அதிகரித்துள்ளது. இதனால் பஸ்களை பராமரிக்கும் செலவுகளும் அதிகரித்துள்ளன.

எனவே எரிபொருட்கள் விலை அதிகரிப்பையும் பராமரிப்புச் செலவுகளையும் கருத்தில் கொண்டு அதற்கேற்ப பஸ்கட்டணங்களை உயர்த்த அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

இதனை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என வற்புறுத்தவில்லை. ஒருவார காலம் அவகாசம் வழங்குகின்றோம். அக்கால எல்லைக்குள் கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் தொழிற்சங்கப்போராட்டத்துக்கு தள்ளப்படுவோம்.

இதற்கான தீர்மானத்தை சங்கப் பிரதிநிதிகள் கூடி எடுத்துள்ளோம். தனியார் பஸ்களில் வருமானம் குறைந்துள்ளது. இதற்கு அரசாங்கமும் மாகாண சபையுமே காரணமாகும்.

அதிகளவிலான பஸ்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதும் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்களை அதிகளவில் சேவைக்கு ஈடுபடுத்துவதுமே காரணமாகும். (ச-5)

## கிளைமோர்த் தாக்குதலில் அதிரடிப் படைவீரர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்லடியில் சிறப்பு அதிரடிப் படையினரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட கிளைமோர்த்தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுக்காலை 7.30 மணியளவில் வீதி ரோந்தில் ஈடுபட்ட சிறப்பு அதிரடிப்படையினரே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

தாக்குதலில் சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இதனையடுத்து அப்பகுதி முழுவதும் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. (ச-5)

## வேலை நிறுத்தத்தில் குதிக்கப்போவதாக மீனவர் சமூகச் சங்கங்களும் எச்சரிக்கை

(கொழும்பு)

எரிபொருட்களின் விலையேற்றத்தால் மீனவர்கள் பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே அரசாங்கம் உடனடியாக எரிபொருள் மானியத்தினை வழங்க முன்வரவேண்டும்.

இல்லையேல் மீனவர்களும் வேலை நிறுத்தப்போராட்டத்தில் குதிப்பர் என்று அகில இலங்கை மீனவர் சமூக சங்கத்தின் பொதுச் செயலாளர் எம்.விஜேந்திரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எரிபொருட்களின் விலை அதிகரிப்பால் மீனவச் சமூகம் எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகள் தொடர்பாக சங்கத்தின் பொதுச் செயலாளர் எம்.விஜேந்திரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையல் கூறியதாவது,

டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பால் மீன்பிடித்துறையில் செலவு நூற்றுக்கு 20 வீதமாக அதிகரித்துள்ளது.

இதனால் சிறிய படகுகளில் மீன்பிடிப்போர் தொடக்கம் பெரிய படகுகளில் மீன் பிடிப்போர் வரை பாரிய நெருக்கடிகளை சந்தித்துள்ளனர். நாட்டு மக்களுக்கு புரதச் சத்தை வழங்கும் மீன் உணவை வழங்கும் மீனவர்களின் வாழ்வு பின்னடைவுகளை சந்தித்துள்ளது. கடலில் மீன் பிடிக்க வரையறைகள் விதிக்கப்படுகின்றன. நிலையான விலைக்கு மீன்களை கொள்வனவு செய்யும் அரசாங்கத்தின் திட்டமும் மந்தகதியிலேயே இடம்பெறுகிறது.

ஏமது சங்கம் 65 மீன் வகைகளுக்கான நிலையான விலையை மீன்பிடி அமைச்சிற்கு வழங்கிய போதும் 19 மீன் வகைகளுக்கான நிலையான விலையே தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூழ்நிலையில் எரிபொருட்களின் விலை அதிகரிப்பால் மேலும் மேலும் மீன்பிடித்துறை நெருக்கடிக்குள் தள்ளப்பட்டு அக்குடும்பங்களின் வருமானம் பின்னகர்த்தப்பட்டுள்ளது. எனவே அரசாங்கம் இது தொடர்பில் கவனம் செலுத்தி மீனவர்களுக்கு எரிபொருள் மானியத்தை வழங்குவதோடு நிலையான மீன்களின் விலையை 20 வீதமாக அதிகரிக்க வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளாவிட்டால் நாடு தழுவிய ரீதியில் எமது சங்கம் தொழிற்சங்கப் போராட்டத்தை மேற் கொள்ளும் என்றார். (ச-5)

# தன்னாட்சி உரிமையை அங்கீகரிக்குக யசூஷியிடம் கூட்டமைப்பு வேண்டுகோள்

(கொழும்பு)

யப்பானின் சிறப்பு சமாதானத் தூதுவர் யசூஷி அகாஷி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு கொழும்பில் அமைந்துள்ள யப்பானிய தூதரகத்தில் இடம்பெற்ற சந்திப்பு இரவு 7.00 மணிக்கு ஆரம்பமாகி சந்திப்பு 85 நிமிடங்கள் நீடித்துள்ளது.

சந்திப்பில், இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு மூலம் இலங்கை அரசாங்கம் தீர்வு காணும் என்ற நம்பிக்கையை விட்டு தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமையை அங்கீகரிக்குமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் வலியுறுத்தியுள்ளனர்.

இதற்கு யப்பான் அரசும் அனைத்துலக நாடுகளும் முன்வரவேண்டும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களால் யப்பானின் சிறப்பு சமாதானத் தூதுவரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் இராணுவ நிகழ்ச்சிநிரல் அடிப்படையில் வடக்கு கிழக்கில் யுத்த முன்னெடுப்புகளில் ஈடுபட்டு வருகின்றது. குறிப்பாக எறிகணைகள், வான் தாக்குதல்களை நடத்தி வருகின்றது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசாங்கம் தன்னிச்சையான யுத்தநிறுத்த விலகலைச் செய்திருக்கிறது. இந்த நிலையில் இலங்கைக்கு அதிகளவு நிதியுதவியை வழங்கும் நாடு யப்பான் என்பதால் யுத்தத்தை நிறுத்த அரசாங்கத்தின் மீது கடுமையான அழுத்தங்களை பிரயோகிக்க யப்பானுக்கு உரிமை உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளனர்.

யுத்த முன்னெடுப்புக்களை நிறுத்த அரசாங்கம் ஏற்க மறுத்தால் யப்பானிய அரசால் வழங்கப்படும் அனைத்து உதவிகளையும் நிறுத்தி, அரசாங்கத்தை வழிக்கு கொண்டு வர முடியும் எனத் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கு 15 தடவைகள் யசூஷி அகாஷி பயணங்களை மேற்கொண்டிருப்பதால் வடக்கு-கிழக்கு வாழ் மக்களின் அவல நிலையை நன்றாகப் புரிந்துள்ளதை அகாஷி ஏற்றுக் கொண்டுள்ளார்.

அனைத்துலக சமூகம் அனைத்து கட்சிப் பிரதிநிதிகள் குழுவினால் முன்வைக்கும் தீர்வுத்திட்டத்தினால் சமாதானம் வரும் என சர்வதேசம் எதிர்பார்ப்பதாகவும் அகாஷி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரிடம் தெரிவித்துள்ளார்.

இதனை நிராகரித்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் பண்டா-செல்வா உடன்படிக்கை முதல், காலம் காலமாக செய்து கொள்ளப்பட்ட அனைத்து உடன்படிக்கைகளும் இலங்கை அரசாங்கத்தினால் கிழித்தும்,தூக்கியும் எறியப்பட்டதே வரலாறு.

இதில் நாம் எள்ளளவும் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை எனத்தெரிவித்ததோடு தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமையை அங்கீகரிக்க யப்பானும் அனைத்துலக சமூகமும் முன்வர வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சந்திப்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மாவை சேனாதிராஜா,துரைரட்ணசிங்கம்,சிறீகாந்தா, அரியநேந்திரன், ஜெயானந்தமூர்த்தி, கனகசபை, சந்திரகாந்தன், பத்மினி சிதம்பரநாதன் போன்றோர் கலந்து கொண்டனர். (எ-5)

## உள்ளூராட்சித்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளதாவது, கிழக்கிலுள்ள இராணுவத்தினரின் துணை ஆயுதக் குழுக்களின் அச்சுறுத்தல்கள் குறித்து விரிவாக விளக்கப்பட்டிருக்கின்றது.

அங்குள்ள இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை ஆயுதக் குழுக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அச்சுறுத்தி வருகின்றனர். தேர்தலில் போட்டியிட்டால் வேட்பாளர்களைப் படுகொலை செய்வோம் என்று அச்சுறுத்துகின்றன.

எனவே அங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் போட்டியிடுவதில்லை என்று முடிபு செய்துள்ளது. எனவே அங்குள்ள இராணுவத்தினருடன் சேர்ந்தியங்கும் துணை ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களைக் களைந்து நீதியான தேர்தலை நடத்த வேண்டும்.

அத்துடன் இந்த வழக்கை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் விசாரணைக்கு எடுத்துத் தீர்ப்பு வழங்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்திருக்கின்றது. (எ-5)

# வாழ்க்கைச் செலவினை கட்டுப்படுத்தாது மக்களின் ஆதரவை திரட்ட முடியாது

## ஜே.வி.பி.தெரிவிப்பு

மக்கள் பாரிய சவால்களுக்கு முகம் கொடுத்துக்கொண்டிருக்கின்ற நிலையில் அரச நிர்வாகத்தின் சீர்கேடுகளால் பொருட்களின் விலைகள் நாளுக்குநாள் அதிகரித்துச் செல்கின்றது. அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் சுமையை குறைக்காவிடின் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு மக்களின் ஆதரவினை திரட்ட முடியாது என்று ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

புலிகளை தடை செய்வதுடன் அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை கைவிட்டு சர்வகட்சிகள் இல்லாத ஆலோசனைக் குழுவை கலைத்தால் மட்டுமே புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு தேசப் பற்றாளர்களின் ஆதரவை திரட்ட முடியும் என்றும் அக்கட்சி சுட்டிக் காட்டியுள்ளது.

ஜே.வி.பியின் அரசியல்சபை விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டு மக்கள் மிக மோசமான சமூக, பொருளாதார,அரசியல் சவால்களுக்கு முகம் கொடுத்துக்கொண்டிருக்கின்றனர். இந்த மோசமான சவால்கள் தொடர்பாக ஜே.வி.பி காலம் தாழ்த்தாது அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தது.

இவ்வாறான சவால்களுக்கு தைரியம், விசுவாசத்துடன் முகம் கொடுத்து வெற்றி கொள்வதற்காக 2001 ஆண்டு முதல் ஜனாதிபதித் தேர்தல் வரையிலும் ஆதரவு வழங்கியது.

எனினும் நிர்வாக சீர்கேடுகள் காரணத்தினால் அம்முயற்சிகள் கைகூடவில்லை.

யதார்த்த அரசியல் பிரச்சினையில் பயங்கரவாதத்தை தோற்கடிப்பதே பிரதான பிரச்சினையாக இருக்கின்றது. 2008 ஆம் ஆண்டு புலிகள் யுத்தத்தின் மூலம் தோற்கடிக்கப்பட வேண்டும் என்று படைகள் தீர்க்கமான முடிபொன்றை எடுத்துள்ள நிலையில் பயங்கரவாத செயற்பாடுகளுடன் இணைந்திருக்கின்ற இதர முன்னணிகளை புரிந்துகொண்டு செயற்படுவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

அரசாங்கத்தின் இவ்வாறான நடவடிக்கைகள் படைத்தரப்பின் வெற்றிகள் நாட்டிற்கு கிடைக்காமல் செய்வதற்கான அரசியல் நடவடிக்கையாகும். பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்கு அரசாங்கம் ஒருபுறத்தில் நடவடிக்கைகளை எடுத்துள்ள போதிலும் பயங்கரவாதத்துடன் இணைந்துள்ள இதர முன்னணிகளை அரசாங்கம் புரிந்துகொள்ளாமை பயங்கரவாதத்தை முழுமையாக தோற்கடித்து தேசியப் பிரச்சினைக்கு தன்னால் தீர்வொன்றை முன்வைக்க முடியாது என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

மறுபுறத்தில் தனது நிர்வாகத்தில் இடம் பெறுகின்ற சகல பிழைகளையும் மூடிமறைப்பதற்காக புலிகளை தோற்கடிப்பதற்கான போராட்டத்தை முன்னிலைப்படுத்தி நிற்கின்றது. இது படைகளின் வெற்றிகளை மழுங்கடிக்கச் செய்கின்ற நடவடிக்கையாகும். (ச-5)

## மணலாற்றில் மோதல் படையினர் இருவர் பலி

(கிளிநொச்சி)

மணலாறு பகுதியில் படையினர் மேற்கொண்ட வலிந்த தாக்குதல் முயற்சி முறியடிக்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக்காலை மணலாறு களமுனையில் விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகள் நோக்கி இரு முனைகளில் ஊடுருவி தாக்குதல் நடத்த வந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதன்போது படையினர் தரப்பில் இருவர் கொல்லப்பட்டதோடு மேலும் சிலர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)



## காணவில்லை

**இமையாணன் வடக்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்த தங்கவேலாயுதம் சண்முகவடிவேல் ஆகிய எனது மாவெள்ளை நிறமுடைய 6 மாதக் கன்றுத்தாய்ச்சியான பசுமாடு கடந்த 09.01.2008 ஆம் திகதி இரவிலிருந்து காணாமல் போயுள்ளது.அந்த பசுமாடு பற்றிய விபரம் தெரிந்தவர்கள் எனக்கு அறிவிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.**

(சி-72)

## இன்று ஒரு தகவல்

# சிரிப்பு

"வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்" என்று சொல்வதுண்டு. அது வெறும் அலங்காரத்துக்காகச் சொன்ன வார்த்தையா அல்லது அர்த்தத்தோடு சொன்ன வார்த்தையா என்று யோசித்தால் –அதில் உண்மை யாகவே அர்த்தம் இருக்கிறது என்பது தெரியவரும். ஆதாரபூர்வமாக அதற்குச் சில நிருபணம்களும் இருக்கின்றன.

Norman causins என்பவர் ஓர் அமெரிக்கஆசிரியர். அவருக்கு ஏதோ ஒரு விதமான அழற்சி நோய் Cinalammatory Discase டாக்டர்கள் எல்லாம் அதற்கு எந்த விதமான வைத்தியமும் கிடையாது என்று சொல்லி விட்டார்கள். டாக்டர்கள் இப்படிச் சொல்லி விட் டார்களே.... விட்டுவிட வேண்டியது தான் என அவர் நினைக்கவில்லை. அவர் என்ன செய்தார்? ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறினார். ஒரு ஹோட்டலிலே ஒரு ரூம் எடுத்துக் கொண்டார். தினமும் அந்த ரூமுக்குப் போவார். தினமும் அவருக்குப் பிடித்த நகைச்சுவைப் படங்களை ரி. வியில் போட்டுப்பார்த்தார். நகைச்சுவை புத்தகங்களை ரசித்து வாசித்தார். சிறிது நாட்களில் அவருக்கிருந்த தொந்தரவுகள் குணமாக ஆரம்பித்தன. இதைக் கேள்விப்பட்டதும். முன்னர் இவருக்கு வைத்தியம் பார்த்து குணமாக்க முடியாது என்ற டாக்டர்கள் வந்தார்கள். அவரை முற்றாகப் பரிசோதனை செய்து பார்த்தார்கள். அவருக்கிருந்த நோய் முற்றாகக் குணமா கிவிட்டதை கண்டுஆச்சரியப்பட்டார்கள். அவர் உடம்பு குணமாக உதவியாக இருந்தது 'சிரிப்பு' என்பதை விஞ்ஞான பூர்வமாக அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். இருந்தாலும் 'சிரிப்பு' எந்த விதத்திலே உதவியாக இருக்கிறது என் பதை இன்னமும் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. எனினும்ஒரு சில விஷயங்கள் மட்டும் புரிகிறது.

சிரிப்பு சுவாசத்தை மேம்படுத்துகிறது. ரத்த அழுத்த த்தை (B.P) குறைக்கிறது. உடம்பு குணமாவதற்குரிய சிலஹர்மோன்கள் அதிகமாக உருவாவதற்கு வழிசெய்கிறது. இந்த அளவுக்குத்தான் சிரிப்பினுடைய செயற்பாட்டை புரிந்து கொள்ள முடிகிறது. இருந்தாலும் இதைப்பற்றிக் கண்டு பிடிக்க வேண்டியது இன்றும் ஏராளம் இருக்கிறது. அதையெல்லாம் கண்டு பிடிக்கிற வரை நாம் காத்துக்கொண்டிருக்க வேண்டிய தில்லை. இப்பொழுதே தாரளமாகச் சிரிக்கலாம். இதில் ஏன் சிக்கனம்? காசா? பணமா?

சிரிப்பு என்றால் 'ஹா ஹா' எனச் சத்தம் போட்டுச் சிரித்தால் தான் உடம்புக்கு நல்லது என்று இல்லை. இலேசான புன்னகை கூட உடம்புக்கு நல்லது செய்யுமாம்! இலேசாக புன்னகை பூத்தால் அந்தச் சமயத்திலே நமது உடம்பு முழுவதும் அமைதி அடைகிறதாம்! இதையும் ஆதாரபூர்வமாகக் கண்டு பிடித்துச் சொல்லியிருக்கிறார்கள். இல்லாமலா 'கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்' என நமது நாயன்மார்கள் பாடியிருக்கிறார்கள். எப்பொழுதாவது மனம் சங்கடமாக இருக்கும் பொழுது கொஞ்சம் முயற்சி செய்து முகத்திலே புன்னகையைக் கொண்டு வந்து பாருங்கள்... அதனுடைய சுகம் அனுபவித்துப் பார்த்தால் தான் தெரியும். கண்ணும் உதடும் மலரும்போது ஏற்படுகின்ற ஆனந்தமே ஆனந்தம் என்கிறார்கள் அனுபவித்துப் பார்த்தவர்கள்... வாழ்க்கையிலே சந்தோஷமாக இருக்க வேண்டுமானால் அதற்கான சில வழிகளையும் அவர்களே சொல்லி யிக்கிறார்கள்... முதலிலே நீங்கள் உற்சாகமாக இருக்கிறவர்க ளுடன் அதிக நேரம் இருங்கள். அழுது வடிபவர்களை ஒதுக்கி விடுங்கள். இரண்டாவது எடுத்ததற்கெல்லாம் சீரியஸ் ஆகி விடக் கூடாது . எதையும் நிதானமாக கையாள வேண்டும். உங்களுக்குப் பிடித்த நகைச்சுவை வீடியோ படங்கள், புத்தகங்களை வாங்கிச் சேர்த்து வீட்டுக்குள்ளேயே ஒரு லைப்ரரி உண்டாக்கிக் கொள்ளுங்கள்! ஒரு பெரிய வர்த்தகப்புள்ளி அவர் ரயிலிலே அடிக்கடி பிரயாணம் செய்பவர். அந்த நேரங்களில் புதினம் பத்திரிகையை சுவாரஸ்யமாக படித்து க் கொண்டே போவராம் எட்டிப் பார்தால் உள்ள ஒரு காமிக் புத்தகத்தை வைத்து படித்துக் கொண்டருப்பாராம். 'ஏன் இப்படி என்று கேட்டால்' என் மனம் இலேசாக இருப்பதற்கு இது ரொம்ப உதவியாக இருக்கிறது என்பாராம்.

சிரிப்பு என்றால் எல்லாவிதமான தமாஷும் உடம்புக்கு நல்லது என்று நினைத்துவிடக்கூடாதாம்! ....JAMES CARROLL என்கிற அமெரிக்க உளவியல் நிபுணர் என்ன சொல்கிறார் தெரியுமா ? அடுத்த வர்களைக் குறை சொல்வது –கேலி செய்வது –நையாண்டி செய்வது இந்த மாதிரி நகைச்சுவையெல்லாம் நல்லது செய்வ தில்லை என்கிறார்.

ஒருவர் வந்தார். இன்னொருவரைக் கூடவே அழைத்து வந்து என்னிடம் காட்டினார். அவர் தன் முகத்தை ரெம்ப சீரியஸாக வைத்துக் கொண்டிருந்தார். என்ன விஷயம் என்று விசாரித்தேன். வந்தவர் என்னைப் பார்த்து இவர் கூட ஒரு பெரிய பிரச்சினை என்றார். 'என்ன?' என்றேன். 'ஏதாவது ஒரு ஜோக் சொன் னால் உடனே சத்தம் போட்டுச் சிரிக்க ஆரம்பித்து விடுகிறார்' என்றார் ஜோக்கை கேட்டு ச் சிரிக்க ஆரம்பித்தால் அது பிரச்சினை இல்லையே.. என்றேன்.

'சிரிக்க ஆரம்பிப்பது பிரச்சினை இல்லை சார்... அப்படி ஆரம்பிக்கிற சிரிப்பை அப்புறம் நிறுத்தவே மாட்டேன் என்கிறார் அது தான் பிரச்சினை' என்றார் அவர்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# வடமாகாணத்தைச் சேர்ந்த 100 ஆசியர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க அமைச்சு தீர்மானம்

## மீள் பரிசீலனைக்கு கோருகிறது தமிழர் ஆசிரியர் சங்கம்

(கொழும்பு)

வடக்கில் நிலவி வருகின்ற அசாதாரண சூழ்நிலை காரணமாகவே அங்கிருந்து வெளியேறிய ஆசிரியர்கள் மேல் மாகாண பாடசாலைகளில் வேதனமின்றி பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த ஆசிரியர்கள் மீளவும் வடமாகாணத்திற்கு திரும்பி தமது பாடசாலைகளில் பணியைத் தொடர தவறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வடமாகாண கல்வி அமைச்சு தீர்மானித்திருப்பது கவலையையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் சி. சரவணபவானந்தன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சூழ்நிலையை கருத்தில் கொண்டு வடமாகாண கல்வி அமைச்சு தமது தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்யவேண்டும் என்ற கோரிக்கையையும் அவர் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடமாகாணத்தைச் சேர்ந்த சுமார் 100க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் மேல் மாகாண தமிழ் மொழி மூலப்பாடசாலைகளில் கடந்த ஒருவருட காலமாக கற்பித்து வருகின்றனர்.

வடக்கில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக கல்வி அமைச்சின் அறிவுறுத்தலின் பேரில் தற்காலிக இணைப்பைப் பெற்று பணியாற்றி வரும் இவர்கள் இதுவரை எது வித வேதனமும் பெற்றுக்கொள்ள வில்லை.

இந்நிலைமை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினூடாக கல்வி அமைச்சுக்கு தெளிவுபடுத்தியதன் பின்னர் குறித்த ஆசிரியர்களின் வேதனம் வழங்குவது தொடர்பில் மேல் மாகாண கல்வி அமைச்சுக்கும் வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கும் அறிவுறுத்தப் பட்டது.

இந்நிலையில் மேற்படி ஆசிரியர்கள் உடனடியாக தமது பகுதிகளுக்குத் திரும்பி தங்களது கடமைகளைப் பொறுப்பேற்குமாறும் தவறும் பட்சத்தில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க விருப்பதாகவும் வடமாகாண கல்வி அமைச்சினூடாக தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தத் தகவல்களை வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவும் உறுதி செய்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ள இத்தீர்மானம் இவ்வாசிரியர்கள் மத்தியில் பெரும் கவலையையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

எனவே இந்நிலைமையை கருத்தில் கொண்ட வடமாகாண சபை கல்வி அமைச்சு தமது முடிபை மனிதாபிமான அடிப்படையில் மீள் பரிசீலனை செய்வதோடு கல்வி அமைச்சுடன் கலந்துரையாடி ஒரு இணக்கப்பாடான முடிவுக்கு வருமாறும் மேற்படி ஆசிரியர்கள் சார்பில் இலங்கை தமிழர்கள் ஆசிரியர் சங்கம் கோரி நிற்கின்றது. (அ-5)

# மக்கள் மனதில் ஓங்கி நிற்கும் கேணல் கிட்டுவின் நினைவு

## இன்று மூத்த தளபதி கேணல் கிட்டுவின் 15ஆவது ஆண்டு நினைவு தினம்



வங்கக்கடலில் இந்தியா புரிந்த துரோகத்தனத்தால் வீரகாவியமான மூத்த தளபதி கேணல் கிட்டு வினதும் அவருடன் வீரகாவியமான ஒன்பது வேங் கைகளினதும் 15 ஆவது ஆண்டு நினைவில் எழுச்சி கொள்ள தமிழர்தாயகம் மட்டுமல்லாது உலகெங்கும் பரந்து வாழும்தமிழ் மக்கள் தயாராகி வருகின்றனர். தனி மனித சரித்திரமாக திகழ்ந்த தளபதி கிட்டை பல்துறை விற்பன்னராக, பார்முழுதும்பரந்து கிடந்த எம் தமிழ் உறவுகளை தமிழர்களின் விடுதலைப்போருக்கு உரமூட்ட உறுதியோடு உருவாக்க தளராது பணிபுரிந்த தளபதீயை குடாநாட்டு மக்களும் நினைவு கூர ஆயத் தமாகின்றனர்.

இவ்வாறு வங்கக் கடலில் வீரகாவியமான மூத்த தளபதி கேணல் கிட்டு மற்றும்ஒன்பது போராளிகளின் 15 ஆவது நினைவு நாளையொட்டி யாழ் . மாவட்ட தமிழ்தேசிய விழிப் புணர்வுக்கழகம் வெளியிட்டுள்ள அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,

சிங்களத்தின் பிடியில் இருந்த யாழ். குடாநாட்டில் படைகளை முகாம்களுக்கு உள்ளே முடக்கி தமிழர்களின் கட்டுப்பாட்டுக்குள் யாழ் . குடாநாட்டை வைத்திருந்தவர் தளபதி கிட்டு. பின்னாளில் விடுதலைப் போராட்டத்தினை சர்வதேச மயப்படுத்தும் வேலைத்திட்டங்களில் பணியாற்றி தாயகம் திரும்பிக்கொண்டிருந்த வேளை இந்திய இராணுவத்தின் சுற்றிவளைப்புக்கு உள்ளாகிய நிலையில் இந்திய அரசின் வஞ்சக வலைக்குள் விழாது தலைவன் வகுத்த கொள்கைக்கு அமைய நெஞ்சகத்தே மூண்டிருந்த கொள்கை நெருப்பை செயல்வடிவமாக்கி தம்மை தாமே மாய்த்து வீரகாவியமான வர்கள் கிட்டுவும் ஏனைய ஒன்பது வேங்கைகளும்.

இன்றைய காலகட்டத்தில் குடாநாட்டு மக்களை சுதந்திர காற்றினை சுவாசிக்க வைத்த தளபதி கிட்டுவின் நினைவுகள் மக்கள் நெஞ்சில் ஓங்கி நிற்பதனை காண முடிகின்றது.

## இராசிபலன்

16.01.2008
(தை 2. புதன்கிழமை)
அச்சுவினி மு.இ 8.30 மணிவரை
அட்டமி மு.ப10.27மணிவரை
இராகுகாலம் 12.34 2.04 மணிவரை
சுபநேரம் 5.04-6.34மணிவரை
(பட்டிப்பொங்கல்)

| | |
|---|---|
| மேடம் | கற்பனை மிகுதி, நல்லமுயற்சி, போசனசுகம், நண்பர்கள் சந்திப்பு |
| இடபம் | காரிய அலைச்சல், பிரயாணம், சுபசெலவு,உறவினர் மனஸ்தாபம். |
| மிதுனம் | எடுத்த காரியம் கைகூடும், நண் பர்கள் சந்திப்பு , விருந்துபசாரம். |
| கடகம் | அதிகாரம் , நல்லமுயற்சி, உறவினர் சந்திப்பு, உற்சாகம் |
| சிங்கம் | புதிய திட்டமிடல் , சரீரப்பிரயாசை, கட்டுப்பாடு , முயற்சி தாமதம் . |
| கன்னி | அபகீர்த்தி, ஆரோக்கியக் குறைவு, காரியதாமதம் ,பணக்குறைவு. |
| துலாம் | களஸ்திரநன்மை, காரியசித்தி, நண்பர்கள்உதவி,விருந்துபசாரம். |
| விருச்சிகம் | தேகநலன் தடைப்பட்ட காரியம் கைகூடும், சுபநிகழ்வு. |
| தனுசு | வியாபார நன்மை, அதிகசெலவு, முயற்சி கைகூடும், சுபநிகழ்வு. |
| மகரம் | மாதா சுகம், சுபசெலவு , காரிய தாமதம், உறவினர் வருகை. |
| கும்பம் | கூட்டு முயற்சி, அந்நியர் சந் திப்பு, பிரயாணநன்மை, பொருள் |
| மீனம் | உணர்ச்சி வசப்படல், பணவிரயம், காரிய தாமதம், போசன சுகம். |

வளவன்

# பாடசாலைகளுக்கு தொடர் விடுமுறையா?

## கல்வி அமைச்சு மறுப்பு

(கொழும்பு)

பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக நாட்டிலுள்ள பாடசாலைகள் அனைத்துக்கும் தொடர் விடுமுறை வழங்கப்படவுள்ளதாக வெளிவந்துள்ள செய்திகளில் எவ்வித உண்மைகளுமில்லை என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தைப்பொங்கலை முன்னிட்டு 14ஆம் 15ஆம் திகதிகள் விடுமுறை நாட்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இன்று முதல் பாடசாலைகள் வழமை போன்று செயற்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (எ-5)

# இணையத்தளம் ஊடாக ஐரிஸ் விசாவுக்கு விண்ணப்பம்

ஜரிஸ் நாட்டு தூதுவராலய செய்திகளி ன்படி ஜனவரி 21ஆம் திகதியில் இருந்து இலங்கையர் அயர்லாந்து விசாவுக்கு நேரடியாக சர்வதேச வலைப் பின்னல் வழியாக விண்ணப்பிக்கலாம் . இதன் படி விண்ணப்பதாரர் வீட்டிலோ அன்றி காரியாலயத்திலோ இருந்தபடி விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து விண்ணப்ப இலக்கத்தைப்பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பதாரர் http//www. inis gov. ie/.... என்ற வலைப் பின்னல் முகவரி ஊடாக விண்ணப்பங்களை அனுப்பலாம் . விசாப் பிரிவில் இதன் மூலம் சில நிமிடங்களில் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து முடிக்கலாம் என தூதுவராலய வட்டா ரங்கள் தெரிவித்துள்ளன.

விண்ணப்ப தாரிகள் தமது கடவுச்சீட்டு மற்றும்அதனுடன் இணைந்த ஆவணங்களை கொழும்பில் உள்ள ஐரிஸ் தூதராக காரியாலயத்திலோ அன்றி புதுடில்லியியுள்ள ஜரிஸ் தூதுவராலயத்திலோ சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்ப இலக்கத்தைக் கொண்டு அதனுடைய முன்னேற்ற நடவடிக்கை கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என ஓர் வெளியீடு தெரிவித்துள்ளது.

இவை நிறைவடைந்ததும் அவர்கள் ஒரு அச்சடிக்கப்பட்ட தொகுப்பினைப் பெற்றுக் கொள்வர். அது அவர்களைhttp:/www. irelandinindia.com என்ற வலைப்பின்னல் முக வரிக்கு வழி நடாத்தும். அதன் மூலம் என்ன ஆவணங்கள் தேவை என்பதை சரிபார்க்க முடியும். (அ-5)

# கண்காணிப்புக் குழுவின் வெளியேற்றம் அதிர்ச்சியும் கவலையும் அளிக்கிறது

## பத்மினி சிதம்பரநாதன் எம்.பி.

இலங்கை அரசு போர்நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து உத்தியோகபூர்வமாக விலகுவதாக அறிவித்ததைத் தொடர்ந்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தமது பணிகளை முடித்துக் கொண்டு வெளியேறுவதாக அறிவித்துள்ளமையானது தமிழ் மக்களுக்கு அதிர்ச்சியையும் கவலையையும் அளிக்கின்றது என்று தமிழ் தேசிய கூட்டமைப்பு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிப்பதாவது,

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வடக்குக் கிழக்கில் பணியாற்றும் போது அவர்கள் பணி தொடர்பாக தமிழ் மக்களுக்கு பெரும் ஆறுதல் இருந்த போதும் சில அதிருப்திகளும் இருந்தன.

உதாரணமாக யுத்தநிறுத்த மீறல் களை மதிப்பீடு செய்யும் முறையில் குறைபாடு களை இனங்கண்டனர். அதாவது தமிழ் மக்கள் கொடி ஏற்றும் போது ஒரு யுத்த நிறுத்த மீறலாக கருதிய கண்காணிப்புக்குழு அரசு பல்லாயிரக் கணக்கில் தமிழ் மக்களை ஷெல் அடித்து இடம் பெயர்த்தியதையும் ஒரு யுத்த நிறுத்த மீறலாகவே கருதினர்.

மேலும் ஒரு கொடியேற்றலையும் ஒரு தமிழ் மகன் அரசால் படுகொலை செய்யப்படுவதையும் சமமாக பார்க்கமுடியுமா? தமிழ் மக்களின் சின்ன சின்ன யுத்த நிறுத்த மீறல்களை தொகை தொகையாக பதிந்து விட்டு ஒப்பந்தம் இருந்த போதே அரசு யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்ட போது கண்காணிப்புக்குழு ஒன்றும் செய்ய முடியாமல் இருந்தது.

புதிய ஜனாதிபதி பதவியேற்றதன் பின் அரசின் மனித உரிமை மீறல்கள் மிக உச்ச நிலையை அடைந்துள்ளது. கடந்த மார்கழி 2007வரை 2600க்கு மேற்பட்ட தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

1010க்கு மேற்பட்ட தமிழ் மக்கள் கடத்தப்பட்டுள்ளனர். 3,40,000 மேற்பட்ட தமிழ் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இதனை கண்காணிப்புக் குழுவினாலோ இணைத்தலைமை நாடுகளாலோ, சர்வதேசத்தாலோ தடுக்க முடியவில்லை. போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு இருக்கும் போதே இந்த நிலையாயின் இவர்களின் பிரசன்னம் இல்லாத போது என்ன நடக்குமோ என்று தமிழ் மக்கள் பெரிதும் அச்சமடைகின்றனர்.

ஒப்பந்தம் இருந்திருக்குமாயின் பேச்சுவார்த்தைக்கு இன்னமும் சந்தர்ப்பம் இருக்கின்றது என்று மக்கள் ஆறுதல் கொண்டிருக்க முடியும் இப்போது அதற்கான சந்தர்ப்பமே இல்லாமல் போய்விட்டது. உள்ளதை இல்லாமல் செய்வது சுலபம் ஆனால் உருவாக்குவது என்பது மிகக் கடினமானது.

இந்நிலையிலும் கூட இணைத்தலைமை நாடுகளும் சர்வதேசமும் கவலையை மட்டுமே தெரிவித்துள்ளன. பல சிரமங்களுக்கு மத்தியிலும் கண்காணிப்புக் குழுவினர் ஆற்றிய பணிகளை தமிழ் மக்கள் மிக நன்றியுணர்வுடன் ஏற்றுக்கொள்கின்றனர். அவர்களுக்கு எமது தரப்பில் சிரமங்கள் ஏற்பட்டிருந்தால் அதற்கு வருத்தம் தெரிவிக்கின்றோம். இன்று அரசு பெரும் யுத்த முன்னெடுப்புடன் போரினால் எல்லாவற்றையும் தீர்த்துவிடலாம் என்று கங்கணம் கட்டுகின்றது. ஆனால் தமிழ் தரப்பு இந்த யுத்த நிறுத்தத்தைப் பேணுவதற்கே இன்னமும் முயற்சிக்கின்றது. எதிர்காலத்தில் உங்களது பணி தொடர வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)




## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட உணவு விநியோகம் தொடர்பான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10மணிக்கு மாவட்டச் செயலகத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சகல ப.நோ.கூ.சங்கங்களினதும் தலைவர் பொதுமுகாமையாளர் யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர், பொது முகாமையாளர் , கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (அ)

## பொங்கல் விழாவுக்கான ஏற்பாட்டு கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் யாழ்.மாவட்டத்தில் நடத்த இருக்கும் பொங்கல்விழா தொடர்பான ஏற்பாடுகளை செய்வதற்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறும்.

இக் கலந்துரையாடலில் பிரதேச செயலக/ உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் கடமைபுரியும் கலாசார உத்தியோகத்தர்கள், கலாசார அபிவிருத்தி உதவியாளர்கள் மற்றும் கலாசார நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி அறிவித்துள்ளார். (அ)

## வீதிகள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபையின் வீதி வேலைத் திட்டங்களாக கடந்த 2007ஆம் ஆண்டு 7 வீதிகள் திருத்தப்பட்டுள்ளன. மாநகரசபையின் அபிவிருத்தி நிதியான 1.5 பில்லியன் ரூபாய்களில் வண்ணார்பண்ணை, ஐயனார் வீதி ,புதுமைமாதா கோவில் வீதி , செட்டித்தெரு ஒழுங்கை,மத்தியூஸ்வீதி, நாகராஜன் வீதி ஆகிய 5 வீதிகள் புனரமைக்கப்பட்டதாக வீதி வேலைகள் திட்ட அதிகாரி வி.எஸ்.சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கமநெகும திட்டத்தின் 1.7 மில்லியன் ரூபாயில் சிவகுருநாதன் வீதி , தர்மலிங்கம் வீதி ஆகிய இரு வீதிகளும் புனரமைக்கப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார்.

மாநகரசபை வீதிகள் திருத்தும் சபைக்கு 200 தார் பீப்பாக்கள் தேவையானபோதும் 200 தார் பீப்பாக்களே கிடைத்துள்ளதாகவும் ஆதலினால் வேலைகள் தாமதமடைந்துள்ளதாகவும், எனினும் 2008ஆம் ஆண்டின் இலக்கான பிரதான வீதிகளின் குண்டு குழிகளை நிரப்புதலை துரிதமாக மேற்கொள்வதாகவும் இவ்வகையில் நாவலர் வீதி கஸ்தூரியார் வீதியின் புனரமைப்பு தொடங்கியுள்ளதாகவும் கஸ்தூரியார் வீதியின் போக்குவரத்து நெருக்கடியால் சனி, ஞாயிறு தினங்களிலேயே வேலைகள் நடைபெறுவதாக அவர் தெரிவித்தார். (10)

## அதிபர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு இம்மாதம் தொடக்கம் அதிகரிப்பு

### கல்வி அமைச்சு தெரிவிப்பு

கல்வியமைச்சின் கீழ் இயங்கும் அரசாங்க பாடசாலை அதிபர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை இந்த மாதம் தொடக்கம் அதிகரிப்பதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது. இதற்கான அங்கீகாரம் அமைச்சரவையில் ஏற்கனவே பெறப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

அரசாங்க பாடசாலை அதிபர்கள் தமது முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நோக்குடன் இந்த விசேட கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகிறது.

அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவுத் திட்டத்தின் பிரகாரம் 1-A,Bதரப் பாடசாலை அதிபர்களுக்கு மாதாந்தம் 750ரூபாவும் 1-Cதரப் பாடசாலை அதிபர்களுக்கு 600 ரூபாவும் ஊக்குவிப்புக்கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, தரம் இரண்டு வகையைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கு 450 ரூபாவும் தரம் 3 வகையைச் சேர்ந்த பாடசாலையில் அதிபர்களுக்கு 300 ரூபாவும் அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை கல்வியமைச்சினால் சகல மாகாண கல்வியமைச்சுச் செயலாளருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (அ-7)




தென்மராட்சி கல்வி வலயத்தில் பரிகாரக்கற்பித்தல் செயல மர்வில் பங்கு பற்றிய ஆசிரியர்களுக்கு சான்றிதழ்களை வல யக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அவர்கள் வழங்கிக் கெ ளரவித்த போது.

## உணவுப் பொருள் விநியோகத்தை உடனடியாக மேற்கொள்ள பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கான உணவு வழங்கும் செயற் திட்டத்தின் கீழ் முதலாம் தவணைக்கான உணவு விநியோகத்துக்கு ப.நோ.கூ.சங்கங்களுக்கு ஏற்கனவே வழங்கற்கட்டளைகள் வழங்கப்பட்டு உடன் உணவு விநியோகத்தினை ஆரம்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இருப்பினும் பல வலயக் கல்விப் பணிப்பாளர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின்படி பல ப.நோ.கூ.சங்கங்கள் இதுவரை பாடசாலைகளுக்கு உணவு விநியோகத்தினை மேற்கொள்ளவில்லை என அறியக் கிடைத்துள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட ப.நோ.கூ. சங்கங்கள் உடனடியாக பாடசாலைகளுக்கு உணவுப் பொருட்களை விநியோகித்து முடிக்குமாறு அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவுறுத்தியுள்ளார். (அ)

## 'ஜீவநதி' 3ஆவது இதழ் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

'ஜீவநதி' கலை இலக்கிய இருதிங்கள் ஏட்டின் மூன்றாவது இதழ் (கார்த்திகை- மார்கழி 2007) வெளிவந்துள்ளது.

இவ்விதழில் ம. இரகுநாதன்; செ. யோகராஜா ,சோ. தேவராஜா,ஆசி.கந்தராஜா ,அன்புமணி ஆகியோரது ஐந்து கட்டுரைகளும் மேன் கவியின் பத்தி எழுத்துக்களும் இடம்பெற்றுள்ளன.

ஆழியான், இயல்வாணன், ம.பா.மகாலிங்கசிவம், ச.ஜனனி ஆகியோரின் கவிதைகளும் நூலில் இடம்பெற்றுள்ளன.

இவற்றுடன் புதுப்புனல் என்ற தலைப்பில் சு. சுதர்சன் , சி .மதுசன் என்ற இரு மாணவர்களின் கவிதை அறிமுகமும் இடம்பெறுவது சிறப்பம்சமாகும்.

சி.கதிர்காமநாதனின் ''நீ ஒய்ந்திருக்கலாகாது பாப்பா',யோகேஸ்வ ரி சிவப்பிரகாசத்தின் ''காணி நிலத்திடையே'' கெக்கிறாவ ஸஹானாவின் ''கறுப்பும் வெள்ளையும்'' ஆகிய சிறுகதைகள் சஞ்சிகைக்குத் தரம் சேர்க்கின்றன. (அ-5)

## சொல்வேந்தர் பொன் சுகந்தனுக்கு 'தமிழ் ஞான வித்தகர்' விருது

(யாழ்ப்பாணம்)

இரண்டு வருட காலத்துக்கு மேலாக வல்லிபுர ஆழ்வார் கோவில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் இராமாயணம் தொடர் சொற்பொழிவினை நிகழ்த்தி வருபவரும் பல்வேறு கலைத் துறைகளில் ஈடுபாடு கொண்ட வருமான சொல்வேந்தர் பொன்.சுகந்தன் கடந்த ஞாயிற்றுக்கிழமை வல்லிபுர ஆழ்வார் கோவில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பேராசிரியர் அ.சண்முகதாஸினால் ''தமிழ் ஞானவித்தகர்'' எனும் பட்ட விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். (அ)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆயுர்வேத திணைக்கள வைத்திய அலுவலர் பகுதியின் ஆரம்ப தர வைத்திய அலுவலர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் 01.02.2008 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ஆயுர்வேத ஆணையாளர் நாவின்ன ஆயுர்வேத திணைக்களம் மகரகம எனும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு 11.01.2008ஆம் திகதிய வர்த்தமானியிலோ அன்றி வலம்புரி காரியாலயத்திலோ பார்வையிடலாம். (அ-6)

## கோமாதா உற்சவம்

(யாழ்ப்பாணம்)

பட்டிப்பொங்கல்,கோமாதா உற்சவம் என்பன யாழ்.நகர் சத்திரத்து ஞான வைரவர் ஆலயத்தில் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில்இன்று முற்பகல் 11.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதில் பட்டிப்பொங்கல், கூட்டுப் பிரார்த்தனை, கோ பூசை, கோ பவனி,கோதனத் திருமுறை ஓதல் என்பன இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து சிறப்புரையும்,பட்டிப்பொங்கல் சிறப்புரையும் நடைபெறும்.

இதேவேளை பசுக்களை வளர்ப்போர் அவற்றை நிகழ்விற்கு அழைத்து வந்து கோ பூசையை சிறப்பிக்குமாறு பசுக்கள், இடபங்கள் பாதுகாப்பதற்கான சகல சமய நிறுவனங்களின் இணையம் கேட்டுள்ளது. (ச-2)

## இடைநிலைக் காப்பகம் திறப்பு விழா வைபவம்

(யாழ்ப்பாணம்)

வைத்தியசாலைகளில் உள நல சிகிச்சை பெற்று குணமடைந்தவர்கள் வீடு சென்று தமது இயல்பு வாழ்க்கையை மீள ஆரம்பிப்பதற்கு பழக்கப்படுத்துவதற்கான சேவையினை வழங்கும் ஆண்களுக்கான இடைநிலைக் காப்பகம் ஒன்று 'குடில்' பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அருகாமையில் உலக சுகாதார நிறுவனத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் டாக்டர் ந.சிவராஜாவினால் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வு காலை 9.00 மணிக்கு யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரனின் தலைமையில் இடம் பெறும்.

இதேபோன்று பெண்களுக்கான இடைநிலைக் காப்பகமானது சுகாதாரத் திணைக்களத்தினால் கடந்த ஒக்டோபர் மாதம் மல்லாகத்தில் திறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஹொக் மீதான புகாரை இந்தியா பெருந்தன்மையுடன் வாபஸ் பெற்றது

## இரு அணிகளுக்கிடையிலான மோதலும் சமரசம்



(பேர்த்)

ஹொக் விவகாரத்தில் இந்திய அணி பெருந்தன்மையுடன் நடந்துகொண்டுள்ளது. இவருக்கு எதிராக அளித்த புகாரை திரும்பப் பெற்றது. இதையடுத்து 4 போட்டி தடையிலிருந்து ஹொக் தப்பியுள்ளார்.

அவுஸ்திரேலிய சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 4 டெஸ்ட் போட்டிகொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதலிரண்டு போட்டிகளின் முடிவில் அவுஸ்திரேலியா 2-0 என்ற முன்னிலையில் இருக்கிறது.

இந்திய வீரர் ஹர்பஜன் இனவெறியைத் தூண்டும் வகையில் கேலி செய்ததாக அவுஸ்திரேலியாவின் சைமண்ட்ஸ் போதிய ஆதாரமற்ற புகாரை தெரிவித்தார். இருந்தபோதிலும் ஹர்பஜனுக்கு மூன்று போட்டிகளில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டது. இதை எதிர்த்து இந்தியா மேல்முறையீடு செய்துள்ளது.

இந்நிலையில் இந்திய அணித் தலைவர் கும்ளே மற்றும் துணைத்தலைவர் தோனி ஆகியோரை தகாத வார்த்தைகளில் திட்டிய அவுஸ்திரேலிய வீரர் ஹொக் மீது புகார் அளிக்கப்பட்டது.

இது தொடர்பான விசாரணை நேற்று முன்தினம் மாலை நடப்பதாக மன்னிப்பு வழங்குவதாக அறிவித்தது. இதனால் ஹொக் தடையிலிருந்து தப்பித்தார். இதையடுத்து இந்திய அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான மோதலின் சமரசம் ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது.

இது இந்திய அணி எடுத்த முடிவா அல்லது அவுஸ்திரேலியா கேட்டுக் கொண்டதா என்பது தெரியவில்லை.

**கிரிக்கெற் முக்கியம்**

முன்னதாக இந் திய அணித்தலைவர் கும்ளே அவுஸ்ரேலிய அணித்தலைவர் பொண்டிங் சமரச பேச்சுவார்த் தையில் ஈடுபட்டனர். இதற்கு பின்னர் ஹொக் மீதான புகாரை வாபஸ் பெறும் முடிவுக்கு கும்ளே வந்ததாகத் தெரிகிறது.

இதுகுறித்து கும்ளே கூறுகையில், போட்டியின் போது ஹொக் உணர்ச்சி வசப்பட்டு பேசிவிட்டார் தனிநபர்களை விட கிரிக்கெற் தான் முக்கியம். பிரச்சினையை பெரிதாக்கும் நேரம் இதுவல்ல என்கிறார்.

தன் மீதான புகாரை வாபஸ்பெற்று தடையிலிருந்து காப்பாற்றியதற்கு இந்திய அணிக்கு அவுஸ்திரேலிய வீரர் ஹொக் நன்றி தெரிவித்துள்ளார்.

போட்டி மைக் புராக்டர் இந்திய அணியைப் பாராட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், வரவேற்கத்தக்க முடிவு இந்திய அணியின் செயல்பாடு பாராட்டுக்குரியது என்றார்.

**பொண்டிங் உருக்கம்**

இந்திய கிரிக்கெற் சபை நிர்வாகி ரத்னாகர் ஷெட்டி கூறுகையில், இம்முடிவினால் வீரர்களின் கவனம் முழுவதும மீண்டும் கிரிக்கெற்றுக்கு திரும்பியுள்ளது. ஹர்பஜன் விடயத்தில் அவுஸ்திரேலியாவும் நல்ல முடிவு எடுக்கும் என நம்புகிறோம்.

இதனால் மனம் உருகிய அவுஸ்திரேலிய அணித் தலைவர் பொண்டிங் மற்றும் சேவாக் ஆகியோர் தங்கள் நன்றியை இந்திய அணியின் முகாமையாளர் சேத்தன் சவுகானிடம் தெரிவித்துள்ளனர். இதனால் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளார் என்றார்.

**தப்புவாரா ஹர்பஜன்**

ஹொக் மீதான புகாரை இந்திய அணி நிர்வாகம் வாபஸ் பெற்று அவரைத் தடையிலிருந்து காப்பாற்றியுது.

இதையடுத்து ஹர்பஜன் மீது அவுஸ்திரேலிய வீரர் சைமண்ட்ஸ் கொடுத்த புகாரும் திரும்பப் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், இவ்விடயத்தில் ஐ.சி.சி, தற்போது புதிய குண்டை தூக்கிப் போட்டுள்ளது. இதுகுறித்து ஐ.சி.சி. அதிகாரி ஒருவர் கூறுகையில், ஹொக் விவகாரத்தில் புகார் ஆரம்பத்திலே வாபஸ்·பெறப்பட்டு விட்டது.

ஆனால், ஹர்பஜன் விவகாரத்தில் ஐ.சி.சி. மேல்முறையீட்டு குழுவை நியமித்துவிட்டது. ஐ.சி.சி. விதிப்படி மேல்முறையீட்டு குழு நியமிக்கப்பட்டால் அதன்பின்னர் புகாரை வாபஸ் பெற முடியாது.


இதனால் ஹர்பஜன் மீதான தடை மேல் முறையீட்டு குழுவுக்கு முடிவில் தான் இருக்கிறது என்றார். இதேவேளை மன்னிப்பு விவகாரத்தில் இரகசிய ஒப்பந்தம் எதுவும் செய்து கொள்ளப் படவில்லைஎனபி.சி.சி.ஐ. அறிவித்துள்ளது. (5)

## சாமுவேல்ஸ் பந்துவீச்சில் சந்தேகம் எழுந்துள்ளது

தென்னாபிரிக்காவில் நடந்து வரும் கிரிக்கெற் போட்டி தொடரில் விளையாடி வரும் மேற்கிந்திய தீவுகள் அணியின் சுழற்பந்து வீச்சாளர் மர்லான் சாமுவேல்ஸ் வேகமாக பந்து வீசுகையில் அவரது பந்து வீச்சில் சந்தேகம் எழுவதாக போட்டி ஆடுகள நடுவர்கள் சிமோன் டபெல், அலீம் தர் ,3ஆவது நடுவர் பிரையன் ஜெர்லிங் ஆகியோர் ஐ.சி.சி. போட்டி நடுவர் ரோஷான் மகனமாவிடம் புகார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தகவல் அறிக்கையை போட்டி நடுவர் ஐ.சி.சி மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணி நிர்வாகத்துக்கு அனுப்பியுள்ளார். இதுகுறித்து ஐ.சி.சி.குழு விசாரணை செய்யும். (5)

## முதல் சுற்றில் சானியா வெற்றி



அவுஸ்திரேலியா மெல்பேர்னில் நடந்து வரும் ஓபன் டென்னிஸ் போட்டியின் முதல் சுற்றில் இந்தியாவின் சானியா மிர்சா வெற்றி பெற்றார். உஸ்பெக்கிஸ்தான் வீராங்கனை இரோடா துல்கானோவாவை வீழ்த்தி முதல் சுற்றில் வெற்றிபெற்றார். (5)

விளையாட்டு

## ஹர்பஜன் சிங்கிடம் விசாரணை திகதி அறிவித்துள்ளது ஐ.சி.சி



(பேர்த்)

ஹர்பஜன் சிங் மேல்முறையீட்டு மீது ஜனவரி 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் விசாரணை நடக்க உள்ளது. இதனையடுத்து இவர் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் முழுமையாக பங்கேற்கலாம்.

ஹர்பஜன் அவுஸ்திரேலிய அணியில் இடம்பெற்றுள்ள ஒரே கறுப்பு இன வீரரான சைமண்ட்ஸை குரங்கு என திட்டியதாக ஹர்பஜன் மீது இனவெறி புகார் சுமத்தப்பட்டது.

இது தொடர்பாக இவருக்கு 3 டெஸ் போட்டிகளில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டது. இதை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மீது நியூசிலாந்து நீதிபதி ஜோன் ஹென்சன் விசாரணை நடத்தவுள்ளார். எதிர்வரும் 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் அடிலைட் நகரில் விசாரணை நடத்தப்படும் என சர்வதேச கிரிக்கெற் சபை அறிவித்துள்ளது. இதையடுத்து பேர்த் (ஜனவரி16-20), அடிலைட் (ஜனவரி 24-28) டெஸ்ட் போட்டிகளில் ஹர்பஜன் பங்கேற்பதில் சிக்கல் இல்லை. ஆனாலும் சாதகமான தீர்ப்பு வந்தால் மட்டுமே அடுத்து நடக்கவுள்ள முத்தரப்பு ஒரு நாள் தொடரில் (பெப்ரவரி 3) இடம் பெற முடியும். (5)

## அவுஸ்திரேலிய முக்கோணத் தொடர் இலங்கை உத்தேச அணி அறிவிப்பு

(கொழும்பு)

இந்தியா, அவுஸ்திரேலியா, இலங்கை அணி மோதும் 3 நாடுகள் கொண்ட கிரிக்கெற் போட்டி பெப்ரவரி மாதம் அவுஸ்திரேலியாவில் நடைபெறுகிறது.

இதற்கான 15 பேர் கொண்ட இலங்கை அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. அணியில் 6 வேகப்பந்து வீச்சாளர்கள் இடம் பெற்றுள்ளார்கள். அணிவிபரம் வருமாறு, ஜெயவர்த்தன (அணித்தலைவர்), சங்ககார (விக்கெற் காப்பாளர்), ஜெயசூர்யா, தரங்கா, தில்ருவான் பெரேரா, மிலஷான், சாமர சில்வா, கபுகேதர, வெலகேதர, சமிந்த வாஸ், மலிங்க, குலசேகர, முரளிதரன், மகரூப் ,அமரசிங்க.

இலங்கை அணி எதிர்வரும் 24 ஆம் தி[illegible] அவுஸ்திரேலியா புறப்படுகிறது.

ஜனவரி 30 ஆம் திகதி மற்றும் பெப்ரவ[illegible] 2 ஆம் திகதிகளில் முறையே இரண்டு பயிற்சி ஆட்டங்களில் விளையாடுகிறது. 3 நாடுகள் போட்டியில் தனது முதல் ஆட்டத்தில் இந்[illegible]யாவை பெப்ரவரி 5 ஆம் திகதி சந்தி[illegible]கிறது. (5)

## யுவராஜ்சிங்குக்கு பதிலாக சேவாக்




(பேர்த்)

அவுஸ்திரேலியாவில் இன்று ஆரம்பமாகியுள்ள இந்திய, அவுஸ்திரேலிய டெஸ்ட் போட்டியில் யுவராஜ் சிங்குக்கு பதிலாக சேவாக் சேர்க்கப்பட்டுள்ளார். இன்று பேர்த்தில் இந்திய, அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையே 3 ஆவது டெஸ்ட் போட்டிகள் ஆரம்பமாகிறது.

ஏற்கனவே அவுஸ்திரேலியா 2-0 என்ற நிலையில் உள்ளது. இந்நிலையில் இன்று யுவராஜ் சிங்குக்கு பதிலாக வீரேந்திரசேவாக் இந்திய அணியில் இடம்பெறுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)









இன்று பேர்த்தில் ஆரம்பமாகும் இந்திய, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 3ஆவது டெஸ்ட் கிரிக்கெற் போட்டியை முன்னிட்டு நேற்று பயிற்சியில் ஈடுபட்டுள்ள இந்திய அணியின் தலைவர் அனில் கும்ளேக்கு பயிற்றுவிப்பாளர் ஹரி ஹெஸ்ரன் ஆலோசனை வழங்குவதையும், அறிமுக வீரர் பங்கஜ் சிங் ஆகியோரை முதல் இரண்டு படத்திலும் பயிற்சியில் ஈடுபட்டுள்ள அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் டைட், அறிமுக துடுப்பாட்டவீரர் ரூட் கிறிஸ் ஆகியோரை மூன்றாவது, நான்காவது படத்திலும் காணலாம்.

# கண்காணிப்புக் குழுவின் சேவைக்கு —நோர்வே தூதுவர் பாராட்டு—

(கொழும்பு)

போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவினர் மக்த்தான பணியாற்றியுள்ளனர். அவர்கள் கடந்த ஆறு வருடகாலம் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளதுடன் தமது பணிகளை பக்கச்சார்பு இன்றியும் திறமையுடனும் நிறை வேற்றியுள்ளனர்.

அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன் என்று நோர்வே தூதுவர் ரொறிஹட்றீம் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் இருந்து விலகிக்கொண்டதையடுத்து கண்காணிப்பு பணியாளர்களின் கடமைகள் இன்றுடன் முடிவுக்கு வருகின்றன.

இதனையொட்டி நோர்வே தூதுவரின் வாசஸ்தலத்தில் இடம் பெற்ற பிரியாவிடை வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே நோர்வே தூதுவர் இவ்வாறு தெரி வித்தார்.

அங்கு தொடர்ந்து அவர் பேசுகையில், பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் கண்காணிப்பாளர்கள் தமது கடமைகளை செவ்வனே நிறைவேற்றியமை குறித்து நான் எனது மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடந்த ஆறு வருட காலமாக நடைமுறையில் இருந்த யுத்த நிறுத்த உடன்படிக்கை முடிபுக்கு வந்ததையடுத்து அவர்கள் நாடு திரும்புகின்றனர். அவர்களின் சேவைகள் மிகவும் பாராட்டத்தக்கதாகும். அவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன் என தெரிவித் தார்.

இதே வேளை, இலங்கை அரசாங்கத்தின் சார்பில் அங்கு உரையாற்றிய சமாதான செயலகப் பணிப்பாளர் பேராசிரியர் ரஜீவ் விஜேசிங்க கூறுகையில்,

நோர்வே கண்காணிப்பாளர்களின் சேவையை பாராட்டுவதாகவும் பல்வேறு நெருக்கடிக்கு மத்தியில் அவர்கள் தமது சேவையை மேற்கொண்டதாகவும் இவ்வாறு ஏற்ற இறக்கங்கள் சகஜமானது எனவும் தெரிவித்தார்.

இப் பிரியாவிடை நிகழ்வில் அமெரிக்க தூதுவர் றொபேட ஒ பிளேக், கனடா, நோர்வே, இந்திய தூதரக அதிகாரிகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்ட னர். அங்கு கருத்து தெரிவித்த கண்காணிப்பு க்குழுவின் தலைவர், நோர்வே கண்காணிப்பாளர்கள் பகுதி பகுதியாக நாடு திரும்பவுள்ளதாகவும், தமது பணி இலங்கையில் நிறைவுக்கு வந்தபோதிலும் மேல்திகமாக சில நாட்கள் தங்கியிருந்து அலுவலக கடமைகள், நிருவாக ரீதியான பணிகளை நிறைவேற்றவிருப்பதாகவும் தெரிவித் தார். (அ-5)

# விண்ணப்பம் கோரல்

இந்திய வெளிவிவகார அமைச் சின் ஒதுக்கீட்டில் பொறியியல் கற்கை நெறி (BE) மருத்துவம் (MBBS) பாம சிஸ்ட் ஆகிய கற்கை நெறிக ளுக்கு 2008-2009ஆம் ஆண் டின் சுய நிதித்திட்டத்தின் கீழ் கல்வி பெறவிரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின் றன.

இதற்கான விண்ணப்பப்படிவங் களை எடியூகேஷன் லிங் இந்திய உயர் ஸ்தானிகர் அலுவலகத்தில் பிற்பகல் 2.00மணி தொடக்கம் 4மணிவரை க.பொ.த.(சாதாரண தர) உயர்தர (இலங்கை, இலண்டன்) சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ் ஆகியவற்றை சமர்ப் பித்து பெற்றுக்கொள்ளலம். (அ-5)

# கடலோரப் பாதுகாப்பை அதிகரிக்க இந்தியா திட்டம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் ஊடுருவுவதைத் தடுப்பதற்காக கடலோரப் பகுதிகளில் பாது காப்பை வலுப்படுத்த இந்தியா திட்டமிட்டுள்ளது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை இலங்கை அரசு முறித்துக் கொண்டதை அடுத்து இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே போர் தீவிரமடைந்துள்ளது.

இதைத் தொடர்ந்து இந்தியக் கடலோரப் பகுதிகளில் பாதுகாப்பை வலுப்படுத்த புதிய நடவடிக்கைகள் எடுக்குமாறு இந்திய இராணுவ அதிகாரிகள் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ள னர் என இந்தியத் தலைவர்கள் தெரிவிக்கின் றனர்.

கடல் வழியாக புலிகள் இந்தியாவுக்குள் ஊடுருவ வாய்ப்புள்ளது. தமிழகம் உள்ளிட்ட தென்னிந்திய பகுதிகளில் தங்களது அனுதாபிகளின் உதவியுடன் ஆயுதங்களை இலங்கை வடபகுதிக்குக் கடத்த வாய்ப்புள்ளது என்று இந்திய இராணுவ அதிகாரிகள் மத்திய அரசை எச் சரித்துள்ளனர். (எ-5)

# 2008க்குள் யுத்தத்துக்கு முடிபு இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

புலிகளுக்கு எதிரான யுத்தத்தை தொடர்ந்தும் நடத்திச் செல்ல மேலுமொரு இராணுவ தளபதிக்கு வாய்ப்பு கிட்டாது எனவும் 2008 ஆம் ஆண்டு இறுதிக்குள் புலிகள் இயக் கத்தை முற்றாக அழித்துவிடுவோம் எனவும் இராணுவ தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளதாக லக்பிம செய்தி வெளியிட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

விடுதலைப்புலிகள் இயக்கத்தை முற்றாக அழித்து விடும் பலம் இராணுவத்தினருக்கு காணப்படுவதாகவும் வவுனியா, மன்னார், வெலி ஓயா மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் படையெடுப்புக்கள் ஆரம்பிக் கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வருட இறுதிக்குள் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் வன்னிப் பிரதேசத்தை முழுமையாகக் கைப்பற்றுவதாகவும் அப்பிரதேசங்களின் மீது படையினர் மேற்கொள்ளும் தொடர் தாக்குதல்கள் காரணமாக புலிஉறுப்பினர்கள் நாளுக்குநாள் அப்பிரதேசங்களைவிட்டு தப்பிச் செல்வதாகவும் அவர் மேலும் தெரி வித் துள்ளார். (அ-5)

# இணைந்த சேவைக்குள் ஆவண உதவியாளர்களை இணைத்துக் கொள்ளுமாறு கோரிக்கை

(கொழும்பு)

பொது நிர்வாக உள்நாட்டுஅலுவல்கள் அமைச்சின் இணைந்த சேவைக்குள் ஆவண உதவியாளர் பதவித் தரத்தில் உள்ள அரசஊழியர்களையும் இணைத்துக் கொள்ள பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண் டுமென அகில இலங்கை ஆவண உதவியாளர் சங்கம் கோரிக்கை விடுத் துள்ளது. கடந்த 2000 ஆம் ஆண்டு முதல் கல்வி அமைச்சு உட்பட அமைச்சின் கீழுள்ள தேசியகல்விக் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மற்றும் தேசி ய பாடசாலை என்பவற்றில் ஆவண உதவியாளர்களாக பணிபுரியும் அரச ஊழியர்கள் சகல தகைமையும் இருந்தும்பரீட்சை திணைக்களத் தினால் முகாமைத்துவ சேவை மற்றும் இதர இணைந்த சேவையில் உள்ளவர்க ளுக்காக நடாத்தப்படும். எந்த வொரு போட்டி பரீட்சையிலும் தோற்ற முடியாத நிலையில் இருப்பதாக தெரி வி த்துள்ளனர்.

கடந்த 8வருடங்களாக, ஆவண உதவியாளர்களாக பணிபுரியும் ஏறக்குறைய 700க்கும் மேற்பட்ட ஊழியர்கள் அதே பதவித் தரத்தில் இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர். (அ-5)

# விலையேற்றத்துக்கு எதிராக கிளர்ந்தெழும் காலம் வெகு தொலைவில் இல்லை

(கொழும்பு)

பெரிய அளவிலான அமைச்சர வையும் ஊழல் மோசடிகளுமே எரிபொருள் உட்பட அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்துக்கு காரணமாகும். விலை யேற்றத்துக்கு உலக சந்தையும் யுத்தமுமே காரணம் எனக்கூறி அரசாங்கம் தப்பித்துவிட முடியாது என்று ஜே. வி. பி. தெரிவித்துள்ளது.

விலைஅதிகரிப்பு தொடர்ந்தால் ஆட்சி மாற்றத்தினை தவிர்க்க முடியாது என்றும் அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது. எரிபொருள் விலையேற்றம் தொடர்பாக ஜே.வி.பி யின் அரசியல் குழு விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உலகச் சந்தையையும் யுத்தத்தையும் காரணம் காட்டிக் கொண்டு எரிபொருள் விலையை அதிகரிக்கும் அரசாங்கத்தின் நாடகத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.


உலக சந்தையில் விலையேறுவதற்கு முன்பே கொள்வனவு செய் யப்பட்ட எரிபொருட்களேதற்போது அரசாங்கத் தால் விற்பனை செய்யப்படுகின்றன.

எனவே விலையேற்றத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. பெரிய அளவிலான அமைச்சரவையை கொண்டு நடத்தவும் ஊழல் மோசடிகளை ஈடு செய்யவும் அத்தோடு நிர்வாகச் சீர்கேட்டை மறைத்துக் கொள்வதற்கே மக்கள் மீது சுமைகளை சுமத்தி விலைகள் அதிகரிக் கப்பட்டுள்ளன.

அத்தோடு அரிசியின் விற்பனை ஏக போக உரிமைகளை இரண்டு அமைச்சர்களுக்கும் ஒரு அமைச்சரின் சகோதரருக்குமே வழங்கப் பட்டுள்ளது. இவர்கள் அரிசியை மிருக உணவு தயாரிப்பதற்காக விற்பனை செய்துள்ளனர்.

மக்களின் வயிற்றுப் பசியை போக்காது மிருக உணவு தயாரிப்புக்கு அரிசியை வழங்கியமை கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

எனவே விலையேற்றத்திற்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழும் காலம் வெகு தொலைவில் இல்லை. இந் நிலை தொடர்ந்தால் ஆட்சி மாற்றம் ஏற்படுவதை தடுக்க முடியாது. (அ-5)



தலைநகர் கொழும்பில் வீதிச் சோதனையில் தமிழ் மக்களிடம் அடையாளத்தை பரிசோதிக்கும் பொலிஸார்....

# 50 வருடங்கள் சிறையில் வைக்கப்பட்டிருந்தவர் 1.5மில். நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல்?

(கொழும்பு)

50 வருட காலம் சிறைவாழ்க்கையை அனுபவித்த ஒருவர் நேற்று முன்தினம் விடுதலைசெய்யப்பட்டுள்ளார். டி.பி. ஜேம்ஸ் என்பவரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவராவார். அவரது தந்தையைக் கத்தியால் குத்திக்காயப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் இவர் 1958 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

அப்போது அவ ருக்கு வயது 30. 1958 இல் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்ட இவர் அங்கிருந்தும் மனநோயாளர்வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். அங்கு சிகிச்சை யளிக்கப்பட்ட பின்னர் மீண்டும் சிறைச்சாலைக்கே அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

30 வயதில் சிறைச்சாலைக்குச் சென்ற ஜேம்ஸின் இளமைக்காலம் வீணடிக்கப்பட்டு விட்டது.

இப்போது அவர் 80வயதான கண்பார்வையற்ற நரையான தலையுடன் கூடிய வயதான மனிதர் என்றும் சட்டத்தரணி தர்ம விஜய செனிவிரெட்ண விபரித்துள்ளார். கடந்த மாதம் ஜேம்ஸ் திடீரென சுகவீனமடைந்துள்ளார்.

இதனையடுத்து அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதனைத் தொடர்ந்தே இவரது விவகாரம் சிறைச்சாலை அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டுவரப் பட்டுள்ளது.

அவர் கடந்த வாரம் நீதி மன்றத்தால் பிணையில் விடுதலைசெய்யப்பட்டார். இதனைத் தொடர்ந்து அவரது மருத்துவ செலவினங்கள் மற்றும் செலவினங்களின் பொருட்டு1.5 மில்லியன் ரூபா நஷ்டஈடாகக் கோரவுள்ளதாகவும்,

அது தொடர்பாக வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் சட்டத்தரணி செனிவிரெட்ண மேலும் தெரிவித்தார்.

(அ-5)

# கொமர்ஷல் வங்கி பயிலுநர்களுக்கு கொழும்பில் நேர்முகப் பரீட்சை

(கொழும்பு)

கொமர்ஷல் வங்கிக்கு புதிதாக வங்கியாளர் பயிலுநர்களை சேர்த்துக்கொள்வதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 19 திகதி கொழும்பு யூனியன் பிளேசில் அமைந் துள்ள கொமர் ஷல் வங்கி மனித வள அபிவி ருத்திப் பிரிவில் நட டபெறவுள்ளது. விண்ணப்பிப்பவர்கள் 25 வயது க்குட்ப ட்டவர்களாகவும் கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சையில் கணிதம் ஆங்கிலம் உட்பட ஐந்துபாடங்களில் திறமைச்சித்தியுடன் கல்வி ப் பொதுத்தராதர உயர் தரப் பரீட் சையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

பட்டதாரிகள் 28 வயதுக் குட்ப ட்டவர்களாகவும் வங்கியாளர் பரீட்சையில் சித்தி பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமையும் வழங்கப் படும்.

தெரிவு செய்யப்படவுள்ளவர்கள் நேர்முகப்பரீட்சைத் தினத்தில் எழுத்துப் பரீட்சைக் குத் தோற்ற வேண்டும். (அ-5)

> கொஞ்சம் வைத்திருப்பவன் ஏழையல்ல; அதிகம் விரும்புகின்றவன்தான் ஏழை.
> –பின்லாந்து

வலம்புரி

## பொருட்களை விலையேற்றுவதற்கு பொதுமக்கள் உடந்தையாகலாமா?

கடந்த சில தினங்களாக பொதுமக்கள் அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதில் அதி தீவிரம் காட்டி வருகின்றனர்.

தைப்பொங்கல் திருநாளை ஒட்டி பண்டிகைக்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்வது என்பதற்கு அப்பால்,யுத்தம் ஆரம்பித்து விடும் என்ற பயம் காரணமாக அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதில் பொதுமக்கள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

ஐந்து மாதங்களுக்குப் போதுமான உணவுப் பொருட்கள் கையிருப்பில் உள்ளதாக வணிகர் கழகம் அறிவித்திருக்கும் அதேநேரம் பொது மக்கள் பொருட்களை வீடுகளில் களஞ்சியப்படுத்த முற்படுவதனால் பொருட்களின் விலைகள் இயல்பாக ஏற்றமடைவது தவிர்க்க முடியாததே.

அதாவது,கேள்வி அதிகரிக்க விலை அதிகரிப்பது பொருளியலின் அடிப்படை விதி.

யுத்தத்தை எதிர்பார்த்து பொருட்களை வீடுகளில் களஞ்சியப்படுத்த முற்படும்போது, பொருட் பதுக்கலும் நிகழவே செய்யும். இதுவே இப்போது யாழ்ப்பாணத்தில் நடக்கிறது.

இந்நிலையை மாற்றுவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்புத்தேவையாகும். வசதியுள்ளவர்களும், நடுத்தர வர்க்கத்தினரும், பொருட்களை கொள்வனவு செய்து வீடுகளில் தேக்கி வைத்திருக்கும் போது, புறநடையான பொருட் தட்டுப்பாடு ஏற்படும். இந்நிலைமை ஏழை மக்களை பெரிதும் பாதிக்கும்.

குறிப்பாக அன்றாடம் கூலித் தொழில் செய்து சீவியம் நடத்துவோரால் இரண்டு நாட்களுக்குத் தேவையான பொருட்களைக் கூட கொள்வனவு செய்யமுடியாது.

இச்சூழ்நிலையில்; பொருட் தட்டுப்பாடு, பதுக்கல், நுகர்வோரின் பாதுகாப்புக்கருதிய பொருட் சேகரிப்பு நடவடிக்கைகள் சந்தையில் இருக்கக் கூடிய பொருட்களுக்கு அதிகூடிய விலை அதிகரிப்பை ஏற்படுத்தும்.

இவ்விலை அதிகரிப்பை பெருமளவில் தாங்கிக் கொள்பவர்கள் ஏழைக் குடும்பங்களாகவே இருக்கும். எனவே பொதுமக்கள் அவசரப்பட்டு கடைகளில் இருக்கக்கூடிய பொருட்களை எல்லாம் தேவைக்கு அதிகமாக கொள்வனவு செய்து வைப்பதனால் அவை பழுதடைவதற்கும், சந்தையில் விலையை அதிகரிப்பதற்கும் காரணமாக அமைகின்றது.

எனவே பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் அறத்தைக் கடைப்பிடிக்க பொதுமக்கள் தயாராக இருக்க வேண்டும் என்பது அன்பான வேண்டுதல்.

இதற்கப்பால் யுத்த சூழ்நிலையை எதிர்பார்த்து பொதுமக்கள் பொருட்களை கொள்வனவு செய்து இருப்பில் வைத்திருக்க முற்படும்போது பங்கீட்டு முறையை உடனடியாக அமுல்படுத்த வேண்டும்.

இது விடயத்தில் யாழ்.செயலகம், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,வணிகர் கழகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புத் தேவையாகின்றது.

மேற்குறிப்பிட்ட அமைப்புக்கள் 'கேள்வி அதிகரிப்பை' உணர்ந்து பங்கீட்டு முறையை அமுல்படுத்தும்போது வீடுகளில் களஞ்சியப்படுத்தும் நடவடிக்கை மட்டுப்படுத்தப்படும்.

இதுவே, விலையேற்றத்தை தடுப்பதற்கான அதி உச்ச வழியாக இருக்கும்.

# இணைத்தலைமை நாடுகளின் கோரிக்கை
# பயங்கரவாத ஒழிப்புக்கு தடையான விடயம்
## வன்னி மீதான தாக்குதல் ஆரம்பமாகும் என்கிறார் அமைச்சர் ஹெகெலிய

(கொழும்பு)

உலகையே நீர்மூலமாக்கிவரும் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காகவே படை நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிலையில் விடுதலைப்புலிகளை சந்திப்பதற்கு வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு அனுமதி வழங்குவதென்பது பயங்கரவாத ஒழிப்பதற்கு தடையாக அமைந்துவிடும் என்று அரசாங்கத்தின் பாதுகாப்புத்துறைப் பேச்சாளரும் அமைச்சருமான ஹெகெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இணைத்தலைமை நாடுகள் விடுதலைப் புலிகளுடன் தொடர்பினை ஏற்படுத்த அனுமதி கோருவது பயங்கரவாத ஒழிப்புக்கு தடையான விடயமாகும். எனவே பயங்கரவாதத்தினை அழிக்க இணைத்தலைமை நாடுகள் உதவ வேண்டும். இன்று புதன்கிழமையுடன் அரசாங்கம் யுத்த நிறுத்தத்திலிருந்து விலகிவிடும். அதன் பின்னர் படையினர் வியூகம் அமைத்து வன்னி மீதான தாக்குதலை முன்னெடுப்பர் என்றும் அவர் மேலும் கூறினார். விடுதலைப்புலிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தவும் அவர்களுடன் சந்திப்புக்களை ஏற்படுத்தவும் அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் என்று இணைத் தலைமை நாடுகள் கோரியுள்ளமை குறித்து கேட்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது,

விடுதலைப்புலிகள் பயங்கரவாத இயக்கம். அவர்களோடு பேச்சுவார்த்தைகளை நடத்துவதால் எதுவிதமான தீர்வும் காண முடியாதென்பதை பல தசாப்த காலமாக புலிகள் வெளிப்படுத்தியுள்ளனர்.

எனவே இலங்கை அரசாங்கம் தன்னிச்சையான முடிபாக புலிகளுக்கு எதிரான யுத்தத்தை ஆரம்பிக்கவில்லை. உலகமே பயங்கரவாதத்திற்கு எதிராக அணி திரண்டுள்ளது. அந்த அணியில் இணைந்து கொண்டே படை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளோம்.எமது படையினர் வெற்றிகரமாக கிழக்கை மீட்டெடுத்தனர். அத்தோடு புலிகளையும் பலவீனப்படுத்தி வன்னிக்குள் கட்டுப்படுத்தியுள்ளனர்.

எனவே விரைவில் புலிகள் அமைப்பையே பூண்டோடு அழித்து தமிழ் மக்களுக்கு ஜனநாயகத்தை வழங்குவோம்.

இதனை இணைத் தலைமை நாடுகள் உட்பட சர்வதேசமும் இலங்கைக்கான யப்பானிய விசேட தூதர் அகாஷியும் புரிந்து கொண்டு பயங்கரவாதத்தை ஒழிக்க ஆதரவு வழங்க வேண்டும். எனவே தற்போதைய தருணத்தில் புலிகளை சந்திப்பது பயங்கரவாதத்தை அழிக்கும் முயற்சிகளை பாதிக்கும்.

இன்றுடன் அரசாங்கம் யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையிலிருந்து விலகிக் கொள்கிறது. இதன் பின்னர் எமது படையினர் வியூகம் வகுத்து வன்னி மீதான தாக்குதல்களை முன்னெடுப்பார்கள் .

நாட்டில் யுத்தத்தை பிரகடனப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. இது யுத்தமல்ல பயங்கரவாதிகளுக்கு எதிராக எமது படையினர் மேற்கொள்ளும் தாக்குதலாகும். கடைசிப் பயங்கரவாதியையும் அழித்து வடக்கை விரைவில் மீட்டோம்.

இந் நடவடிக்கைகளின்போது தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வோம்.

பயங்கரவாதத்தை அழித்த பின்னர் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்கவேண்டும். அதற்கான முன்னெடுப்புக்களையும் அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது.

பயங்கரவாதத்தையும் தமிழ் மக்களையும் முடிச்சுப்போடமுடியாது வடபகுதி மக்கள் பயங்கரவாதத்தின் ஆயுதங்களுக்கு பயந்து மௌனமாக வாழ்கின்றனர். அவர்களுக்கு பேச்சுச் சுதந்திரத்தையும், ஜனநாயகத்தை வழங்குவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

(அ-5)

# இணைத்தலைமை நாடுகளின் மிரட்டலுக்கு அடிபணிய வேண்டாம் - ஹெல உறுமய

(கொழும்பு)

இணைத்தலைமை நாடுகளின் மிரட்டலுக்கு பணிந்து விடாது போரை நடத்துமாறு ஜாதிக ஹெல உறுமய கட்சி அரசுக்கு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதன் பொதுச் செயலாளர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளதாவது,

போர்நிறுத்த உடன்பாட்டிலிருந்து வெளியேறுவதில் அரசு காட்டிய துணிச்சலை கைவிடக்கூடாது இணைத்தலைமை அல்லது அனைத்துலக நாடுகளின் மிரட்டலுக்கு அடி பணிந்து விடாது போரை தொடர்ந்து நடத்தவேண்டும். இணைத் தலைமைநாடுகள் கேட்டுக்கொண்டாலும் ஜப்பானின் அமைதிக்கான பிரதிநிதி கிளிநொச்சி செல்வதற்கு அரசு அனுமதி வழங்கக்கூடாது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரை அரசு கைவிடாது தொடர்ந்து நடத்த வேண்டும் விடுதலைப்புலிகளுடன் அரசு பேச்சுக்கள் நடத்த விரும்பினாலும் எதிரிகளின் கூடாரங்களை (மேற்குலகம்) விடுத்து நட்பு நாடுகளான இந்தியா, சீனா, பாகிஸ்தான், ஈரான் போன்றவற்றுடன் நட்புறவுகளை ஏற்படுத்தவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-5)

# பல்கலைக்கழக அனுமதிக்கான கைந்நூல் 20ஆம் திகதிக்கு வெளியிடப்படும்
## ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் சமரநாயக்க

(கொழும்பு)

2008ஆம் ஆண்டு கல்வியாண்டுக்கு பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பத்திற்கான கைந்நூல்கள் இம் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் 10 புதிய பாடங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதால் 19ஆயிரத்து 650 மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப்படுவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் க.பொ.த உயர்தரப்பரீட்சை பேறுபேறுகளின் மீளாய்வுப்பணி முடிபடைந்ததும் பல்கலைக்கழகங்கள் அனுமதிக்கான வெட்டுப்புள்ளி வெளியிடப்படும் எனவும் மானியங்களின் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, க.பொ.த. உயர் தரப்பரீட்சை பெறுபேறுகளின் மீளாய்வுக்கான விண்ணப்ப முடிபுத் திகதி எதிர்வரும் 21 ஆம் திகதி என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-5)

# மனோ கணேசனின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டும்
## யு.என்.எச்.சி.ஆர். தெரிவிப்பு

'நிதிக்குப் புறம்பான ப்டுகொலைகள், காணாமல் போதல் தொடர்பான பொதுமக்கள் கண்காணிப்புக்குழுவின் தலைவரும், மேலக மக்கள் முன்னணியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசனின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பான யு.என். எச்.சி .ஆர் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் யு.என்.எச்.சி. ஆரின் மனித உரிமை மீறல் தடுப்புப் பிரிவு பிரதிநிதி ஹின்டா ஜிலானி எழுதிய கடிதம் இலங்கையின் ஐ.நாவிற்கான பிரதிநிதி தயான் ஜெயதிலக்க ஊடாக அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மனோ கணேசனின் பாதுகாப்பு விலக்கி கொள்ளப்பட்டது மிகவும் கவலை அளிக்கின்றது. அது மனித உரிமை மீறல்களைத்த தடுக்கும் அவரது நடவடிக்கைகளை நிறுத்தும் முயற்சியாகும்.

எல்லோருக்கும் தனிப்பட்ட வகையிலும் குழுவாகவும் மனித உரிமை மீறல்களை தடுப்பதற்கான சுதந்திரம் உண்டு. அடிப்படை மனித உரிமைகள் தொடர்பாக அவர்கள் தேசிய மற்றும் அனைத்துலக ரீதியாக குரல் கொடுக்க முடியும். ஆனால் அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டியது அரசின் கடமை . அதன் மூலம் அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும் என்று அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ-5)

## முகத்துவாரத்தில் வெடிபொருட்கள் மீட்பு

(கொழும்பு)

கொழும்பு முகத்துவாரம் பிரதீபா மண்டபத்திற்கும் காக்கை தீவிற்கும் இடைப்பட்ட பகுதியிலிருந்து வெடிப்பொருட்களை கடற்படையினர் மீட்டுள்ளனர். சி-4 ரக வெடி பொருட்கள் எட்டு கிலோ கிராம், சைக்கில் போல்ஸ்கள் போன்றவை இப்பகுதியிலிருந்து மீட்கப்பட்டதாக கடற்படை பேச்சாளர் கொமாண்டர் டி.கே. பி தச நாயக்க தெரிவித்தார்.

இப்பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் சந்தேகத்திற்கிடமான பொதிகளை சோதனைக்கு உட்படுத்தியபோது இவை மீட்கப்பட்டதாகவும் இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறினார். (அ-5)

## நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்குட்பட்ட காலம் கடந்த பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவுகள் யாழ் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தினால் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இடம்பெற உள்ளதாகவும் இதுவரை இப்பதிவுகளை செய்யாதவர்கள் தமது பிரிவு கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு நடமாடும் சேவையில் உரிய பதிவுகளை செய்யுமாறு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (அ)

## அனுமதி அட்டைகளை பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதலாம் ஆண்டு இறுதிப்பரீட்சைகள் வரும் 18,19 ஆம் திகதிகளிலும் இரண்டாம் ஆண்டு இறுதிப்பரீட்சைகள் வரும் 21ஆம் திகதி முதல் 29 திகதிவரையும் நடைபெற இருப்பதால் அதற்கான அனுமதி அட்டைகளை நாளை வியாழக்கிழமை கலாசாலை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு ஆசிரியர் கலாசாலை அதிபர் ஆ. ஸ்ரீஸ்கந்தராசா அறிவித்துள்ளார். (அ)

# ஐரோப்பிய நாடுகளில் புலிகள் நிதி சேகரிப்பு

(இந்தியா)

லண்டனிலும் ஐரோப்பாவிலும் தமிழீழ விடுதலைப்புலிகள் சில முன்னணி அமைப்புக்களின் ஊடாக மறைமுகமாக மில்லியன் கணக்கான டொலர்களைத் திரட்டும் நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவதாக இலங்கை அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது என ரைம்ஸ் ஒவ் இந்தியா செய்தி வெளியிட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு, புலிகளின் இத்தகைய நடவடிக்கைகளைப் பிரித்தானிய அரசாங்கம் தடை செய்துள்ள போதிலும் சில தென்னிந்திய திரைப்பட நடிகர்களின் ஆதரவுடன் இந் நிதி சேகரிக்கும் பணி தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இலங்கை தனது குற்றச்சாட்டில் சுட்டிக்காட்டியுள்ளது.

இது குறித்து லண்டனிலுள்ள இலங்கைத் தூதரகப் பேச்சாளர் ஒருவர் கருத்து வெளியிடுகையில், வெண்புறா என்ற தர்ம அமைப்பின் பேரில் பெருந்தொகையான நுழைவுச் சீட்டுகள் கடந்த வாரம் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பான இரு காட்சிகள் பரிஸிலும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மிகவும் பிரபலமான தென்னிந்திய நட்சத்திரங்கள் கலந்து கொள்ளும் இசை நிகழ்ச்சி என இது விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது.

இதில் தென்னிந்திய இசை அமைப்பாளர் ஷியாம் மற்றும் பிரபல நடிகர் சத்தியராஜ் அவரது மகன் நடிகர் சிபி, நடிகை மதுமிதா, கேரளா நடிகை பாவனா,பாடகர் கார்த்திக், பாடகர் ஹரிஸ், பாடகி வினஜா மற்றும் பாடகர் மனோ ஆகியோர் பங்குபற்றுவதாகவும் விளம்பரப்படுத்தி விற்பனை செய்யப்பட்டது.

இதேவேளை பரிஸில் நடத்தப்படும் இந் நிகழ்ச்சியினூடாக இரண்டு மில்லியன் பவுண்ஸ் கிடைக்கும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. சில அறிக்கைகளுக்கு அமைய தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கத்தைய நாடுகளின் தலைநகரங்களில் மில்லியன் கணக்கான டொலர்களைச் சேகரித்து புலிகளின் ஆயுதக் கொள்வனவுக்கு உதவுவதாகக்குற்றஞ்சாட்டப்பட்டுத் தடை செய்யப்பட்டதையடுத்து வெண்புறா அமைப்பு அதன் பங்கை அமெரிக்கா மற்றும் லண்டனில் ஆற்றி வருகின்றது. (எ-5)

# தமிழர் தாயகப் பகுதியில் நேற்று கைவிசேடம்

தமிழ் மக்களின் தை மாதப் பிறப்பான நேற்று நல்லளிப்பு என்ற கைவிசேடம் வழங்கும் நடைமுறை தமிழர் தாய்கத்தில் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆரிய அடிப்படையிலான சித்திரைப் புத்தாண்டு தமிழரின் புத்தாண்டு என்று கருதப்பட்டு அதில் கைவிசேடம் வழங்குவது நடைமுறையில் இருந்து வந்தது. தமிழ் மக்களின் நடைமுறையிலுள்ள வழுக்களை களையும் வகையில் கைவிசேடம் எனப்படுவது தமிழரின் உண்மைப் புத்தாண்டான தைப் பொங்கல் நாளான புத்தாண்டு அன்று நல்லளிப்பு என்று வழங்கும் நடைமுறை தொடங்கப்பட்டுள்ளது. இதன் தொடக்கம் நேற்று கிளிநொச்சியிலுள்ள தமிழீழ வைப்பகத்தில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளதுடன் தனியார் மற்றும் அரச நிறுவனங்களிலும் நல்லளிப்பு வழங்கப்பட்டது. (எ-5)

# களுவாஞ்சிக்குடியில் இருவர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

முதலாவது சம்பவம் கல்லாறு தாம்போதிப்பகுதியிலும் இரண்டாவது சம்பவம் களுவாஞ்சிக்குடி விஷ்ணுகோவிலுக்குள்ளும் நடைபெற்றது. இச்சம்பவங்கள் தொடர்பில் தெரிய வருவதாவது,

மகிளூரிலிருந்து அன்றிரவு 7.30 மணியளவில் கோட்டைக்கல்லாறு நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இளைஞனே அப்பகுதிக்கு வானில் வந்தவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கோட்டைக்கல்லாறு பவுண்டரி வீதியைச் சேர்ந்த தியாகராஜ் ரஞ்சித்குமார் (வயது 23) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். அதேநேரம்அன்றிரவு 10.00 மணியளவில் களுவாஞ்சிக்குடி விஷ்ணுகோவிலுக்குள் மோட்டார் சைக்கிள் திருத்தும் கடை உரிமையாளர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இரவு 10.00 மணியளவில் இவர் மோட்டார் சைக்களில்சென்று கொண்டிருந்தபோது வானில் வந்தவர்கள் இவர்கள் மீது தாக்குதல் நடத்த முற்படவே அவர் தப்பி ஓடிச் சென்று விஷ்ணு கோவிலுக்குள் அடைக்கலம் புகுந்தார்.

எனினும் கோவிலுக்குள் நுழைந்த ஆயுதக்குழுவினர் இவரைச் சுட்டுக்கொன்று விட்டு தப்பிச் சென்றுள்ளனர். (எ-5)

# உடன்படிக்கையிலிருந்து விலகல்...

போதே போர்நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து அரசாங்கம் விலகியதற்கான காரணங்கள் குறித்து யப்பானின் சிறப்புத் தூதுவர் யசூசி அகாஷிக்கு விளக்கப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

வடக்கில் நடைபெற்று வரும் மோதல்கள் குறித்தும் இச் சந்திப்பில் ஆராயப்பட்டிருக்கின்றது. அதேநேரம் இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்குமாறு இச் சந்திப்பின் போது யப்பானின் சிறப்புத் தூதுவர் யசூசி அகாஷி வலியுறுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சந்திப்பில் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கோஹன்னவும் ஜனாதிபதியின் செயலாளரும் கலந்து கொண்டனர்.

சந்திப்பிற்கு முன்னதாக வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகமவையும் தனியாகச் சந்தித்து யசூசி அகாஷி பேச்சு நடத்தியிருந்தார்.

போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து இலங்கை விலகினாலும் யப்பான் அரசாங்கமும் இணைத் தலைமை நாடுகளும் இலங்கைக்கான தமது உதவிகளை தொடர்ந்தும் வழங்க வேண்டுமென இச் சந்திப்பில் றோகித போகொல்லாகம யப்பான் சிறப்புத் தூதுவர் யசூசி அகாஷியிடம் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை யப்பானின் சிறப்புத் தூதுவர் யசூசி அகாஷி சந்தித்துப் பேச்சு நடத்தவிருக்கின்றார். ஜே.வி.பியின் தலைவர் சோமவன்சவை யப்பானின் சிறப்புத் தூதுவர் யசூசி அகாஷி சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

# ஒப்பந்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிக்குமாறு...

ஒப்பந்தத்தை இராணுவத்தினரை விட விடுதலைப்புலிகள்தான் 6 ஆயிரம் தடவைகள் மீறியுள்ளதாகப் போர் நிறுத் தக் கண்காணிப்புக் குழு கூறியுள்ளதே என பி.பி.ஸி. செய்தியாளர் கேட்டதற்கு ப்திலளித்த நடேசன்,

இந்த 6 ஆயிரம் மீறல்கள் என்ற எண்ணிக்கை இலங்கை அரசு போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் அளித்த முறைப்பாடுகள் மட்டுமே தவிர கண்காணிப்புக் குழுவினால் அளிக்கப்பட்ட தீர்ப்புக்கள் அல்ல.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் இந்த மீறல்களை பதிவு செய்யும் முறை கள நிலைவரங்களைப் பிரதிபலிக்கவில்லை என்ற காரணத்தால் அதைப் பதிவு செய்யும் நடைமுறையைக் கைவிட்டு விட்டது.

இலங்கை இராணுவத்தினரால் இழைக்கப்பட்ட மீறல்களின் பாரிய தன்மை மற்றும் எண்ணிக்கையைப் பார்த்தால் போர்நிறுத்த ஒப்பந்தம் எந்தளவிற்கு அரசாங்கத்தினால் மீறப்பட்டது என்பது புரியும் என்றார்.

போர்நிறுத்த ஒப்பந்தம் முறிவடைவதற்கு காரணமாகவிருந்த தற்போதைய இராணுவ நடவடிக்கைகள் விடுதலைப்புலிகள் மாவிலாறு பாலத்தை மூடியதன் விளைவாகத் தான் தொடங்கின என்ற கருத்துக்கள் நிலவுகின்றதே என்று அவரிடம் கேட்கப்பட்ட போது,

உண்மையிலேயே மாவிலாற்றுப்பிரச்சினை இருவேறு பிரதேசங்களில் வசிக்கும் மக்களுக்கிடையே ஏற்பட்ட சிவில் தகராறு. அதைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்திருக்கலாம். அப் பிரச்சினை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கக் கூடிய நிலையில்தான் இருந்தது.

அதை ஒரு தாக்குதலுக்கான வாய்ப்பாக இராணுவம் தான் பயன்படுத்திக் கொண்டது. மாவிலாறு மதகு திறந்து விடப்பட்ட பின்பும் இராணுவம் ஏன் தாக்குதல்களைத் தொடர்ந்தது என்று ஆய்வாளர்கள் பலர் கேட்டுள்ளனர் என்றார்.

வடக்கில் தாக்குதல்கள் தொடரும் நிலையில் தென்னிலங்கையில் தாக்குதல்கள் தொடருமா? சிவிலியன் மற்றும் பொருளாதார நிலைகள் மீதும் தொடர்ந்து தாக்குதல் நடத்து வீர்களா என்று கேட்கப்பட்டபோது பதிலளிக்கையில்,

நாங்கள் அந்தச் செயல்களில் ஈடுபடவில்லை. அதில் சம்பந்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுவதை நாங்கள் முழுமையாக மறுக்கின்றோம். பொருளாதார மற்றும் சிவிலியன்களின் இலக்குகள் மீது நாங்கள் தாக்குதல் நடத்த மாட்டோம். இராணுவ இலக்குகள் மீது மட்டுமே தாக்குதல் நடத்துவோம்.நாங்கள் ஒரு முறையான கட்டமைக்கப்பட்ட இராணுவ இயக்கம் என்றார் அவர். (ச)

# கண்காணிப்புக்...

உருவாக்கப்பட்ட போர்நிறுத்தத்திலிருந்து அரசு தன்னிச்சையாக வெளியேறியிருந்தது. இதனைத் தொடர்ந்து இன்று மாலை 7 மணியுடன் போர்நிறுத்த உடன்பாடு அதிகார பூர்வமாக முடிவுக்கு வருகின்றது.

இதனிடையே கண்காணிப்புக் குழுவின் தலைவர் லார்ஸ் ஜோஹன் சொல்பேர்க், அதன் முகாமையாளர் ஜேனாஸ் குன்னர் அலன்சன் ஆகியோர் இன்று ஊடகவியலாளர் மாநாட்டினை நடத்தவுள்ளனர்.

இதன்போது இலங்கையில் கண்காணிப்புக் குழு மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாக இறுதி அறிக்கையினை வெளியிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. மன்னார், வவுனியா, கிளிநொச்சி, அம்பாறைப் பகுதிகளில் உள்ள தமது அலுவலகங்களைக் கண்காணிப்புக் குழுவினர் கடந்த வாரம் மூடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# மன்னாரில் மோதல்...

களுடனும் சேதங்களுடனும் படையினர் பின் வாங்கினர். இதில் 30ற் கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 100ற்கும் அதிகமானோர் காயமடைந் துள்ள்னர்.

படைத் தரப்பைச் சேர்ந்த ஒருவரின் சடலமும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டது. இம் முறியடிப்புத் தாக்குதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் 3 போராளிகள் வீரச் சாவடைந்துள்ளனர் என விடுதலைப்புலிகள் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மன்னார் முள்ளிக்குளம் பகுதியில் நேற்றுக் காலை படையினர் மேற்கொண்ட முன்னகர்வுத் தாக்குதலும் விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளதாகவும் இதில் படையினர் 4 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் 3 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இம் மோதல் சம்பவத்தில் 22 படையினர் காயமடைந்ததாகவும் விடுதலைப்புலிகள் தரப்பில் பெருமளவான உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் இராணுவம் தெரிவித்துள்ளது. (ச-5)

# பொதுமக்களின் உரிமைகளை...

இது தொடர்பில் அவர் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் போர் இடம்பெறுவது அனைத்துச் சமூகத்தையுமே பாதிக்கும். பொதுமக்களைத் தடுத்து வைத்து விசாரணை செய்தல், சிறுவர்களைப் படையில் சேர்த்தல், கடத்தல் மற்றும் வாழ்விடத்தை விட்டு வெளியேற்றுதல் என்பன சர்வதேச சட்டங்களை மீறும் செயலாகும்.

அவ்வாறு சர்வதேச சட்டங்களை மீறும் எத்தரப்பாகவிருந்தாலும் சரி எத்தரப்பின் உயர் அதிகாரிகளாகவிருந்தாலும் சரி அவர்களுக்கு எதிராகக் குற்றவாளி எனக் கருதி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் அம்மையார் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசு போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து.விலகியமையடுத்து இவ்வறிக்கையை லூயிஸ் ஆர்பர் அம்மையார் நேற்று வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளராகவுள்ள லூயிஸ் ஆர்பர் அம்மையார் முன்னாள் ஐ.நாவின் யுத்த குற்றங்களுக்கானத் தீர்ப்பாளராகவும் கனடா உயர் நீதிமன்ற நீதியரசராகவும் இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-அ-5)

# விடுதலைப்...

வாதத்தைக் கையாள்வதற்கு இங்கு ஏற்கன வே போதுமான அளவு பல சட்ட உட்கட்டமைப்புக்கள் இருப்பதால் தற்போது விடுதலைப்புலிகளைத் தடை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என போகொல்லாகம அகாஷிக்குத் தெரிவித்தார்.

சமாதான உடன்படிக்கையைக் கைவிடாமல் தொடர்ந்து நிலைநிறுத்துவது பற்றியே அகாஷி கருத்துக்களை வெளிப்படுத்தினார். ஆனால் இலங்கை வெளிவிவகார அமைச்சர் சமாதான நடவடிக்கைகள் தொடர்வதாகவும் இலங்கை அரசினால் நியமிக்கப்பட்ட சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு சிறுபான்மைத் தமிழர்களைத் திருப்திப்படுத்தக் கூடிய வகையில் ஜனவரி 23ஆம் திகதி அதிகாரப் பரவலாக்கல் பொதியைச் சமர்ப்பிக்கவுள்ளதாக உறுதி கூறினார்.

அரசியல் தீர்வு ஓரளவு வழிக்கு வந்துள்ள தாகப் போகொல்லாகம அகாஷிக்குக் கூறினார். (ச-6)


## அன்பார்ந்த அதிபர்களே!

இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து க.பொ.த. (உயர்) தரம் - 2007 சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களைப் பாராட்டும்

## சிறப்பு மலர்

வலம்புரியில் வெளிவரவுள்ளது. 3 B யும் அதற்கு மேற்பட்ட பெறுபேறுகளையும் பெற்ற மாணவர்களின் முழுப் பெயர், கற்றல் பிரிவு என்பவற்றை உறுதிப்படுத்தி 'பாராட்டுச் சிறப்பு மலர்' வலம்புரி, இல. 3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 24.01.2008க்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நீங்கள் அனுப்பி வைக்கும் மாணவர்களின் பெயர் விபரம் சிறப்பு மலரில் வெளியிடப்படும்.

Note:- 3 A பெற்ற மாணவர்களின் புகைப்படங்களை அனுப்பி வைத்தால் அவை சிறப்பு மலரில் பிரசுரிக்கப்படும். (புகைப்படங்களின் பின் பக்கத்தில் தவறாது பெயர் எழுதப்படல் வேண்டும்)

## கலாலயா பயிற்சியகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம், (பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

மகளிருக்கான துரித குறுகியகால பயிற்சிகள்

❖ 3 மாத கால கேக் ஐசிங், உணவு தயாரித்தல், கூந்தல் அலங்காரம் Fabric Painting, பூ வேலை, கை வேலைப் பயிற்சிகள். மேற்படி பயிற்சிக் காலத்தின் நடுப் பகுதியில் Facial அழகுக் கலை நடைபெறும்.

❖ புதிதாகத் தையல் பழக விரும்புவோருக்கான 6 மாத காலத் தையல் வகுப்புகள்.

| | |
|---|---|
| சனி, ஞாயிறு புதிய வகுப்புக்கள் ஆரம்பம் | 19.01.2008 |
| கிழமை நாள் புதிய வகுப்புக்கள் ஆரம்பம் | 21.01.2008 |

மேலும் விபரங்களை பி.ப.1.00 மணிவரை நேரில் அறிந்து கொள்ளலாம். (c-720) -பதிவாளர்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தல் 16.01.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.